# பொள்ளாச்சி நகராட்சி

## 2017-2018ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

## 1. அமைப்பும் மேலாட்சியும்

**1.ஆட்சி எல்லை :**

இந்நகராட்சியானது பொள்ளாச்சி, கோட்டாம்பட்டி மற்றும் தாளக்கரை கிராமத்தில் ஒரு பகுதியான வடுகபாளையம் ஆகிய மூன்று வருவாய் கிராமங்களை கொண்டதாகும். இந்நகராட்சிப் பகுதியின் மொத்தப் பரப்பளவு 13.87 சதுர கிலோ மீட்டார்கள் ஆகும்.

| | |
|---|---|
| அரசாணை எண்.763M நாள்.10.06.1920 | 01.11.1920 முதல் நகராட்சியாக அறிவிக்கப்பட்டது. |
| அரசாணை எண்.1332 ML (MPL) நாள்.24.09.1920 | 01.11.1920 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும் |
| அரசாணை எண். 263 LA (துறை) நாள். 07.02.1953 | 01.04.1953 முதல் நிலை நகராட்சியாகவும் |
| அரசாணை எண்.143 RD & LA (துறை) நாள். 25.01.1973-ன் படி | 07.04.1973 முதல் தேர்வு நிலை நகராட்சியாகவும் |

தமிழ்நாடு அரசின் 09.05.1983 ம் நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் (பல்வகை) 651-ம் எண் அரசாணையின்படி 01.04.1983 முதல் இந்நகராட்சியை தேர்வு நிலையிலிருந்து சிறப்பு நிலையாக உயர்வு செய்து ஆணை வழங்கப்பட்டதன்படி பொள்ளாச்சி பெரு நகராட்சியாகவும் செய்லபட்டு வருகின்றது.

**2.மக்கள் தொகை:**

மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒவ்வொரு பத்தாண்டு மக்கள் தொகை கீழ்க்கண்டவாறு இருந்தது.

1921 - 11875

1931 - 22112

1941 - 26198

1951 - 41850

1961 - 54369

1971 - 68609

1981 - 82354

1991 - 86897

2001 - 88303

2011 - 90180

**3. நகர்மன்றம்:**

அறிக்கை ஆண்டில் தனி அலுவலர் அவர்கள் மூலம் நகரமன்றம் செயல்பட்டு வருகிறது.

**அறிக்கையாண்டில் நடத்தப்பட்ட நகர்மன்றக் கூட்டங்கள் விபரம்**

| | கூட்டத்தின் விபரம் | அறிக்கையாண்டு | சென்ற ஆண்டு |
|---|---|---|---|
| 1 | சாதாரண கூட்டம் | 10 | 5 |
| 2 | அவசரக்கூட்டம் | 9 | 14 |
| 3 | சிறப்புக்கூட்டம் | – | – |
| | மொத்தம் | 19 | 19 |

அறிக்கையாண்டில் கூட்டத்தில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் அனைத்தும் அந்தந்தக் கூட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் மன்றத்தில் வைக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 685 ஆகும். இது கடந்த ஆண்டில் 599 ஆகும்.

## மன்றத்தில் முடிவு செய்யாத பொருள்

2017–2018 ம் ஆண்டு இறுதி வரை மன்றத்தால் முடிவு செய்யப்படாமல் நிலுவையாக உள்ள பொருள் எதுவும் இல்லை. அறிக்கையாண்டில் பரிசீலனைக்கு வந்த பொருட்கள் அனைத்தும் தாமதமின்றி முடிக்கப்பட்டது.

## 4 ஆணையர் மற்றும் அலுவலர்கள்

திரு.ஜி.முருகேசன், அவர்கள் 01.04.2017 முதல் 31.03.2018 வரை ஆணையாளர் பொறுப்பாக பணிபுரிந்துள்ளார்.

## 5. மேலாளர்

திரு.வ.நாராணயன் 26.07.2017 முதல் 31.03.2018 வரை மேலாளராக பணியாற்றினார்.

## மேலாளுகை

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியின் பொது நிர்வாகப்பிரிவு வேலைகளுக்கும் வசூல் பணிகளை கவனிப்பதற்கும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மேலாளர் | 1 |
| 2. | கணக்கர் | 1 |
| 3. | காசாளர் | 1 |
| 4. | உதவியாளர் | 9 |
| 5. | உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| 6. | புள்ளி விவரக்குறிப்பாளர் | 1 |
| 7. | இளநிலை உதவியாளர் | 23 |
| 8. | பதிவறை எழுத்தர் | 3 |
| 9. | தட்டச்சர் | 3 |
| 10. | அலுவலக உதவியாளர் | 7 |
| 11. | தோட்டக்காரர் | 1 |
| 12. | காவலர் | 1 |
| 13. | வருவாய் அலுவலர் | 1 |
| 14. | வருவாய் ஆய்வாளர் | 2 |
| 16. | சந்தைக் கண்காணிப்பாளர் | 1 |
| 17. | வருவாய் உதவியாளர் | 16 |
| 18. | காவலர் | 2 |
| 19. | பேருந்து நிலைய காவலர் | 1 |

## 6.இடவசதிகள்

31.12.2018 முதல் 30.12.2018 வரை நகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளி கட்டிடத்திலும், நகராட்சி அலுவலகம் சொந்த அலுவலகக் கட்டிமான பாலக்காடு ரோட்டிலுள்ள புதிய அலுவலக கட்டிடத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ளது. கட்டிடம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 7. வழக்குகளும் இதரச் செலவுகளும்

மன்றத்தின் வழக்கறிஞராக திரு.கே.சம்பத்குமார் அவர்கள் தொடர்ந்து பணியாற்றி வந்துள்ளார். அறிக்கையாண்டில் நிரந்தர வழக்கறிஞர் கட்டணம், இதர செலவுகள் வகைக்காக ரூ.70,000/- செலவு செய்யப்பட்டது.

வருட ஆரம்பத்திலிருந்து நிலுவையாக உள்ள 22 வழக்குகளை முடிவு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் நகராட்சி மீது வழக்கு ஏதும் இல்லை.

## 8. தணிக்கை

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட தணிக்கைத் தடைகள் நிலுவையாக உள்ளன.

| நிதி | 01.04.2017 ம் நாளன்று ஆரம்ப நிலுவை | நடப்பு ஆண்டில் வரப் பெற்றவை | மொத்தம் | தடை நீக்கம் செய்தது | 31.03.2018ம் ஆண்டு முடிவில் |
|---|---|---|---|---|---|
| பொதுநிதி | 26 | 110 | 136 | 96 | 40 |
| ஆரம்பகல்வி நிதி | 1 | 30 | 31 | 10 | 21 |
| குடிநீர் நிதி | 2 | 9 | 11 | – | 11 |
| **மொத்தம்** | **29** | **149** | **178** | **116** | **72** |

மீதமுள்ள 72 பத்திகளையும் தடை நீக்கம் செய்யும் பொருட்டு, சம்பந்தப்பட்ட எழுத்தர்களையும் துறைத் தலைமை அவலுவலர்கள் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 9.அச்சடித்தல்

அலுவலகத்திற்கு தேவையான படிவங்களும், புத்தகங்களும், டோனர்கள் வருவாய் துறைக்கு தேவையான படிவங்கள், கேட்பு புத்தகங்கள், கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு அச்சகங்கள் மூலம் அச்சடித்து பெறப்பட்டுள்ளது. அச்சடித்தல் செலவு மற்றும் எழுதுபொருட்கள் செலவிற்காக அறிக்கையாண்டில் ரூ.14,97,306/- லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

10.

## 2. பொறியியல் மற்றும் குடிநீர் பணிகள்

## பணியாளர்கள்

இந்நகராட்சி பொறியாளர் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் விவரங்கள் பின்வருமாறு,

### பொறியர் பிரிவு பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | பொறியாளர் (நிலை-2) | 1 |
| 2. | உதவி பொறியாளர் | 1 |
| 3. | பணி ஆய்வர் | 2 |
| 4. | வரைவாளர் | 2 |
| 5. | லாரி ஓட்டுநர் | 2 |
| 6. | லாரி கீளினர் | 1 |
| 7. | காவலர் | 7 |
| 8. | கேங் கூலி | 5 |

### குடிநீர் பிரிவு பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | உதவிப் பொறியாளர் | 1 |
| 2. | குழாய் பொருத்துநர் நிலை - I | 1 |
| 3. | குழாய் பொருத்துநர் நிலை - II | 2 |
| 4. | மதகு திறப்பாளர் | 3 |
| 5. | குழாய் சுத்திகரிப்பாளர் | 5 |
| 6. | லாரி ஓட்டுநர் | 2 |
| 7. | நீர்த்தேக்க காவலர் | 3 |
| 8. | மானி அளவர் | 1 |

### தலைமை நீரேற்று நிலைய பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | மின் கண்காணிப்பாளர் | 1 |
| 2. | மின் பணியாளர் நிலை - I | 2 |
| 3. | மின் பணியாளர் நிலை - II | 4 |
| 4. | சுத்திகரிப்பாளர் | 7 |
| 5. | காவலர் | 2 |

### தெரு விளக்கு பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | மின் கம்பியாளர் | 4 |
| 2. | மின் கம்பி உதவியாளர் | 4 |

திரு.கோ.முருகேசன் அவர்கள் 01.04.2017 முதல் 31.03.2018 வரையிலும் நகராட்சி பொறியாளராக அறிக்கையாண்டில் பணியாற்றியுள்ளார்.

பொறியிர் பிரிவு தொடர்பான எல்லா வேலைகளையும் நகராட்சிப் பொறியாளர் மேற்பார்வை செய்து வருகிறார். கட்டிடங்கள் கட்டும் வேலை, சாலைகள் அமைக்கும் பணி ஆகியவற்றை உதவி பொறியாளர்கள் பார்த்து வருகிறார்கள். இவர்களுக்கு உதவியாக பணி ஆய்வர்களும், சாலைப் பணியாளர்களும் உள்ளார்கள்.

மின் பராமரிப்பு பணிகள் தனியார் வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டால் குடிநீர் திட்டப் பணிகளை மின் கண்காணிப்பாளர் கண்காணித்து வருகிறார். இவருக்கு உதவியாக தண்ணீர் விநியோக பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் போதுமான அளவு பணியார்களுடன் குடிநீர் பராமரிப்பு வேலைகள் செவ்வனே கண்காணிக்கப்பட்டு வந்தது.

## 11. சாலைகள்

அறிக்கையாண்டில் துவக்கத்தில் 143.28 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வந்தது. அறிக்கையாண்டில் இறுதியில் மொத்த சாலைகள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | சிமெண்ட் சாலைகள் | 7.65 கிலோ மீட்டர் |
| 2. | தார்தள சாலைகள் | 123.47 கிலோ மீட்டர் |
| 3. | கருங்கல் சாலைகள் | 9.60 கிலோ மீட்டர் |
| 4. | மண் சாலைகள் | 2.56 கிலோ மீட்டர் |

இந்நகராட்சிக்கு சொந்தமான கற்பாறை கிடங்கு கிடையாது. கல்லும் மணலும் ஒப்பந்ததாரர்களே பெற்று பணி செய்து வந்து உள்ளார்கள்.

இந்நகராட்சி எல்லைக்குள் 11.50 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினராலும், 5.00 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் தேசிய நெடுஞ்சாலைத் துறையினராலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 12. குறைந்த செலவில் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம்

சொந்த செலவிலான கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் அரசு மானிய உதவி மற்றும் ஹட்கோ உதவியுடன் இந்நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு

முடிவு பெற்று விட்டது. அறிக்கை ஆண்டில் மேற்படி திட்டத்தில் கழிப்பறை ஏதும் கட்டப்படவில்லை.

## 13. பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம்

இந்நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படும் தலைமை குடிநீர் நிலையம், நகரிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அம்பராம்பாளையம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. ஆழியாறு, பாலாறு ஆகிய இரு நதிகள் கலக்குமித்தின் சந்திப்பில் மேல் மட்டத்திற்கு 80HP மற்றும் 60HP மின்மோட்டார்கள் மூலம் ஆற்றுநீர் கொண்டு விடப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட 75100 மற்றும் 220 குதிரை திறன் உள்ள மின்மோட்டார்கள் பம்ப்செட் மூலம் 12" விட்டமுள்ள இருகுழாய் மற்றும் 18" விட்டமுள்ள 1 குழாய் மூலமாக நகரின் நீருந்து நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. 167 மற்றும் 100 வேக மின் மோட்டார் பம்புசெட் வாயிலாக நீருந்து நிலையத்திலிருந்து நகரில் உள்ள 9 உயர்மட்ட நீர்தேக்கம் மற்றும் இரண்டு தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது, தண்ணீர் லாரிகள் குடிநீர் எடுத்துச் செல்ல வசதிகள் ஹைட்ரண்ட் அமைக்கப்பட்டுள்ளது. மற்றொன்று மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் நாள் ஒன்றுக்கு 132 லட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இதில் பொள்ளாச்சி நகருக்கு 94 லட்சம் லிட்டர்களும் அருகிலுள்ள 7 கிராமங்களுக்கு 5 லட்சம் லிட்டர்களும் விநியோகிக்கப்படுகிறது.

நீரேற்றம் செய்யும் குழாய்கள் மற்றும் நகரில் உள்ள பிரதான குழாய்களில் உடைப்பு ஏற்படாமல் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு (O&M) திட்டத்தின் கீழ் பழைய வால்வுகளுக்கு பதிலாக புதிய வால்வுகள் பொருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ஐந்து இடங்களில் தலா ரூ.125 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்கனவே உள்ள ஆழ் துளை கிணறுகளில் மின் விசை மோட்டார்கள் பொருத்தி நீர் தொட்டிகள் அமைக்கப்பட்டு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தடையின்றி கிணற்று நீர் வழங்கப்பட்டு வருகிறது.

தலைமை நீரேற்று நிலையத்தில் மின் தடைபடும் நேரத்தில் மின் மோட்டார்கள் இயக்க ஏதுவாக மின் ஆக்கி நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 12.00 கோடி செலவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பிரதான பகிர்மான குடிநீர் குழாய்களை மாற்றி புதிய குடிநீர் குழாய்களை பதிக்கும் பணிக்கு திட்ட மதிப்பீடு தயால் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ.எ | அறிக்கையாண்டில் உள்ள பொதுக்குழாய்கள் | அறிக்கையாண் | கடந்த |
|---|---|---|---|

| ண் | | டு | ஆண்டு |
|---|---|---|---|
| 1 | பொதுக்குழாய்கள் | 198 | 151 |
| 3 | வீட்டு குழாய் இணைப்புகள் 31.03.2017 | 15564 | 14111 |

அறிக்கையாண்டில் 15564 குழாய் இணைப்புகள் உள்ளன. இது கடந்த ஆண்டில் 13620 ஆகும். நாள் ஒன்றுக்கு நபர் சராசரியாக 93 லிட்டல் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தினசரி தண்ணீர் விநியோகம் 94 லட்சம் லிட்டர் ஆகும். பொதுக்குழாய்கள் பிரதானக் குழாய்கள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் ஆகியவற்றை பராமரிக்கத் தேவையான ஆட்களை அமர்த்தி நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 14.இதர குடிநீர் வசதிகள்

தனியாருக்கு சொந்தமான கிணறு 3-ம் நகராட்சிக்குச் சொந்தமான கிணறுகள் 12-ம் உள்ளது. இக்கிணற்றிலிருந்து பம்பு செட்டுகள் பிரதானக் குழாய்கள் பொதுக்குழாய்கள் அமைத்து பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத மற்ற உபயோகத்திற்கு தினசரி விநியோகம் செய்யப்படுகிறது. இந்நகராட்சயின் 2 லாரிகள் மூலம் குடிசை குடியிருப்புகளுக்கும் குழாய் இணைப்பு இல்லாத இடங்களுக்கும் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள குடியமைப்பு வீடுகளுக்கும் சீராக தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது-

## தண்ணீர் விநியோகம் செய்யப்படும் வழிப்புற கிராமங்கள்

1. போடிபாளையம் ஊராட்சி
2. நாயக்கன் பாளையம் பேரூராட்சி
3. ஜமீன் ஊத்துக்குளி பேரூராட்சி

குடிநீர் பற்றாக்குறை இல்லாமல் பொதுவாக திருப்திகரமாக உள்ளது.

## 15. தெரு விளக்குகள்

நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | குழல் விளக்குகள் | 3816 |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள்<br>70w - 20<br>150w -106<br>250w- 213 | 338 |
| 3. | உயர் கோபுர மின் விளக்கு | 11 |
| 4. | சக்தி சேகரிப்பு (2x 36 W ) & (3 x36 W ) | 370 |

| | | |
|---|---|---|
| 5. | மெட்டல் ஹைைடல் | 15 |
| 6 | தெரு விளக்கு 62 x 120w LED | 18 |
| **மொத்தம்** | | **4568** |

**பணியாளர் விபரம்**

1. மின் கம்பியாளர் – 3
2. உதவியாளர் – 4

தற்போது நகராட்சி எல்லைக்குள் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு 12.08.2005 முதல் தனியார் வசம் விடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் தெருவிளக்கு பராமரிப்பு வகையில் ரூ.15,65,256/- செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்கள் குடிநீர் பிரிவு பராமரிப்பு பணிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு பணிபுரிகிறார்கள். அறிக்கையாண்டில் மின் கட்டணமாக ரூ.3,65,25,236/- செலவிடப்பட்டுள்ளது.

## 16. பாதாளச் சாக்கடைத் திட்டம் :–

நகராட்சி பகுதி முழுவதும் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.109.62 கோடியில் செயல்படுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

**நிதிவிபரம்:-**

ரூ. லட்சம்

| | | |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் (IUDM) | ரூ. 6745.00 |
| 2. | ஜெர்மானிய நிதி | ரூ. 2109.00 |
| 3. | தமிழ்நாடு அபிவிருத்தி நிதி | ரூ. 1054.00 |
| 4. | நகராட்சி நிதி | ரூ. 1054.00 |
| | மொத்தம் | ரூ. 10962.00 |
| (மேற்படி பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 13.10.2016 அன்று துவக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது) | | |

## 17) 2017–2018ம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விபரம்

## 1. தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) -2017-18

நகராட்சியில் நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2017-18 நிதி மூலம் அரசு நிதி ரூ.720.00 இலட்சம் நகராட்சி பங்குத்தொகை ரூ.80.00 இலட்சம் மொத்தம் ரூ.800.00 இலட்சத்திற்கு தார்த்தளம் அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் யாவும் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 2. மூலதன மானிய நிதி (CGF) 2017–18

நகராட்சியில் ஜோதி நகர் புதிய பூங்கா அமைத்தல் பணிக்கு மூலதன மானிய நிதி (**CGF) 2017–18** ன் கீழ் அரசு மானிய நிதி ரூ 100.00 லட்சம் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ. 100.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதில் பணிகள் நடைபெற்று வருகிறது

## 3. தீன்தயாள் அந்யோதிய யோஜன - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM) 2017-2018

தீன்தயாள் அந்யோதிய யோஜன - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM) 2017-2018 நிதி மூலம் நகராட்சிக்குட்பட்ட மரப்பேட்டை பகுதியில் வீடு இல்லாதோருக்கு தங்கும் இடம் கட்டுதல் பணிக்கு அரசு நிதி ரூ.42.00 இலட்சம் மொத்த மதிப்பீடு ரூ.42.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெற்று பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

## 18. பொது நூல் நிலையங்கள் மற்றும் படிப்பகங்கள்:

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி தனது பொறுப்பில் 1 படிப்பகம் இலவசமாக நடத்தி வருகிறது. நகராட்சி வடுகபாளையம் வாசகசாலை. இதை தவிர கோவை மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் மூன்று நூல் நிலையங்கள் நகராட்சி எல்லைக்குள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி நூலகங்கள் இயங்கி வருவதால் நகராட்சிப் படிப்பகங்களுக்கு புதிதாக புத்தகங்கள் வாங்கி வழங்கப்படுவதில்லை.

நகராட்சி சார்ந்த 1 படிப்பகம் ஒன்று சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறத.

நகராட்சி வாசக சாலைகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட தினசரி வாராந்திர மற்றும் மாதாந்திர பத்திரிக்கைகள் சஞ்சிகைகள் வாங்கி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| தினசரி தமிழ் (தமிழ்) | - | தினத்தந்தி, தினமலர், தினமணி, தினகரன், தி இந்து |
| தினசரி ஆங்கிலம் | - | இந்து. இந்தியன் எக்ஸ்பிரஸ் |
| வாரப்பத்திரிக்கை தமிழ் | - | கல்கி, குங்குமம், ஆனந்தவிகடன், ராணி, தேவி, துக்ளக், குமுதம், முத்தாரம், கல்கண்டு, ஜுனியர் விகடன் |
| மாதாந்திர பத்திரிக்கை தமிழ் மற்றும் புதியதலைமுறை | - | கோகுலம், கண்மணி, ஓம்சக்தி |

| |
|---|
| ரிப்போர்ட்டர் (வாரம் இருமுறை) |
| ராணி முத்து (மாதம் இருமுறை) |
| மாதஜோதிடம் (மாதாந்திர இதழ்) |
| ஸ்ப்தகிரி (மாதாந்திர இதழ்) |
| ஸ்போர்ட்ஸ் ஸ்டார் |
| ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் (மாதாந்திர இதழ்) |

**19. <u>புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் (2-4 வயது பிரிவு)</u>**

இந்நகராட்சியில் 16.09.1982 முதல் செயல்பட்டு வந்த 29 பாலர் பள்ளி சத்துணவு மையங்கள் 19.03.1993ம் தேசிய 9-ம் எண் அரசாணைப்படி 01.06.1993-ம் தேதி முதல் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு விட்டன. இத்திட்டத்தில் பணியாற்றி வந்த பணியாளர்களும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கு மாற்றப்பட்டு விட்டார்கள்.

**20. பள்ளிச் சத்துணவு மையங்கள் (5-9) (10-14)**

இத்திட்டம் முதலில் மத்திய உணவுத் திட்டமாக இருந்தது. பின்னர் 15.09.1982 முதல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பள்ளி சத்துணவு திட்டமாக திறம்பட இயங்கி வருகிறது. அன்றாடம் சுமார் 3278 குழந்தைகள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். மொத்த மையங்களின் எண்ணிக்கை 19 ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு அமைப்பாளர், ஒரு சமயலர், ஒரு உதவியாள்ர ஆகியோர் பணிபுரிகின்றனர். மையங்களில் உணவு உட்கொள்ளும் குழந்தைகளுக்கு சத்துணவு தயாரிக்க அரிசி, பருப்பு, எண்ணெய் முதலியன நுகர்பொருள் வாணிப கழகத்தினால் மாதா மாதம் நேரடியாக பெறப்படுகிறது. இதர த்தியாவசிய பொருட்களான காய்கறி, கீரைகள், மளிகை சாமான்கள், விறகு போன்ற செலவித் தொகைகள் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அலுவலகத்தில் இருந்த மானியம் பெறப்பட்டு செலவு செய்யப்பட்டு வருகிறது. மேலும் சத்துணவு பணியாளர்களின் மாத ஊதியம் பொள்ளாச்சி சார் நிலை கருவூலகம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி புற அலுவலர்களை ஆய்வு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு பள்ளி சத்துணவு மையங்கள் அனைத்தும் கண்காணிக்கப்படுகிறது. இப்பணிகளை கவனிக்க உதவியாளர் மற்றும் கணக்கர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சத்துணவுத்திட்டத்தில் அரசினரின்

17.09.2010-ம் தேதிய சமூக நலத்துறையினர் 176 எண் ஆணையின்படி அக்டோபர் 2010 முதல் ஐந்து முட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 21.மகப்பேறு நிதி உதவி

டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித்திட்டத்திற்கு 2017-2018 ஆம் ஆண்டிற்கு ரூ.46,64,000/- ஒதுக்கப்பட்டது. மேற்படி தொகையில் 944 ஏழை கர்ப்பிணி தாய்மார்களுக்கு கீழ்க்கண்ட 3 தவணைகளில் ரூ.31,76,000/- தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.8,88,000/- அரசு கருவூலகத்தில் செலுத்தப்பட்டது. மேலும் தற்போது எலேக்ட்ரானிக் கிளியரிங் சிஸ்டம் (ECS) மூலமே தொகை வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| I - 415 x 4000 | = | 16,60,000/- |
| II - 271 x 4000 | = | 10,84,000/- |
| III - 258 x 4000 | = | 10,32,000/- |
| **மொத்தம்** | = | **37,76,000/-** |

## ஜனனி சுரக்ஷா யோஜனா

2015-16 ஆம் வருடத்தில் நிதி பெறவில்லை மீதித் தொகை ரூ.20950/- இருந்தது.2016-2017 ஆம் ஆண்டிற்கான ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு இல்லை வீட்டில் பார்க்கப்பட்ட பிரசவங்கள் ஏதும் இல்லை ஆக மொத்தம் ரூ.20,950/- ல் வங்கியில் பிடித்தம் ரூ.871 போக இறுதியில் இருப்பு ரூ.20,079/- ஐ துணை சுகாதார இயக்குநர் கோவை அவர்களுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது

# 3. பொது சுகாதாரம்

# மருத்துவ நிவாரணம்

## 22. மருந்தகம்

**அ)** அறிகையாண்டில் நகரமன்றத்தின் பராமரிப்பில் கீழ்க்காணும் மருந்தகங்கள் செயல்பட்டு வந்தன.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆயுர் வேத மருந்தகம் | - | 2 |
| 2 | சித்தா மருந்தகம் | - | 2 |
| 3 | பொது மருந்தகம்(அலோபதி) | - | 1 |
| 4 | நாச்சிமுத்து பிரசவ விடுதி | - | 1 |

| | | | |
|---|---|---|---|
| 5 | அரசு ஆரம்ப சுகாதார நிலையம் (பாலிகிளினிக்) | - | வடுகபாளையம் |
| 6 | அரசு ஆரம்ப சுகாதார நிலைம் | - | காமாட்சி நகர் |

ஆ) மருந்தகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் விவரம்.

| **வ,எண்** | **பதவி** | **அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்** | **பணிபுரியும் பணியிடங்கள்** | **காலிப் பணியிடம்** |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் அலோபதி | 1 | - | 1 |
| 2 | சுகாதார பார்வையாளர் | 2 | 1 | 1 |
| 3 | நகர சுகாதார செவிலியர் | 10 | 6 | 4 |
| 4 | மருந்தாளுநர் | 5 | 1 | 4 |
| 5 | மகப்பேறு உதவியாளர் | 6 | 1 | 5 |
| 6 | மகப்பேறு ஆயா | 6 | 1 | 5 |
| 7 | கிளாஸ் நான்கு பெண் உதவியாளர் | 2 | 2 | - |
| 8 | ஆண் செவிலிய உதவியாளர் | 4 | 2 | 2 |
| 9 | பெண் செவிலியி உதவியாளர் | 4 | - | 4 |
| 10 | அலுவலக உதவியாளர் | 3 | - | 3 |
| 11 | குடியிருப்பு தலைமைச் செவிலியர் | 1 | - | 1 |
| 12 | மருத்துவ அலுவலர்ஆயுர்வேதம் | 2 | - | 2 |
| 13 | மருத்துவ அலுவலர் சித்தா | 2 | 1 | 1 |
| 14 | பெண் மருத்துவ அலுவலர் | 3 | 1 | 2 |

## 23. நோயாளிகள்

நகரமன்ற மருந்தகங்களுக்கு நகரிலிருந்தும், நகருக்கு அப்பாலிருந்தும் நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனர். அறிக்கையாண்டில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| **வ. எ** | **மருந்தகம்** | **நகரிலிருந்து வந்த நோயாளிகள்** | **நகருக்கு அப்பால் இருந்து வந்த நோயாளிகள்** |
|---|---|---|---|

| ண் | | | |
|---|---|---|---|
| 1 | பொது மருந்தகம் | 6132 | 2120 |
| 2 | சித்தா மருந்தகம், வடுகபாளையம் | 14436 | 6744 |
| 3 | சித்தா மருந்தகம், மார்க்கெட் ரோடு | 16312 | 4912 |
| 4 | ஆயுர்வேத மருந்தகம். பாலகோபாலபுரம் | 9766 | 4424 |
| 5 | ஆயுர்வேத மருந்தம், டி.கோட்டாம்பட்டி | 9447 | 4820 |
| 6 | நகர சுகாதார நிலையம் | 36305 | 6983 |
| 7 | நாச்சிமுத்த பிரசவ விடுதி | 39506 | 6103 |
| | **மொத்தம்** | **126904** | **36106** |

## 24 இடவசதியும் தளவாடங்களும்

நகரமன்ற மருந்தகங்களுக்காக தேவைப்படும் தளவாடங்கள், மருந்துகள் அவ்வப்போது வாங்கி விநியோகம் செய்யப்பட்டு வந்தது. மேலும் மருந்தகங்களில் போதுமான பணியாளர்கள் இருந்து வந்தனர். மருந்தகங்களை ஆய்வு செய்த அதிகாரிகள் கூறும் குறைபாடுகளை நீக்க அவ்வப்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அறிக்யைண்டில் மருந்துகளுக்கான செலவு ரூ.4,81,488/- ஆகும்.

## 25. நகர நல அமைப்புப் பணியாளர்கள்

அறிக்கையாண்டு முழுவதும் நகர நலப் பிரிவில் கீழ்க்காணும் பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர்.

| வ.எண் | பதவி | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | பணிபுரியும் பணியிடங்கள் | காலிப் பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | நகர் நல அலுவலர் | 1 | 1 | - |
| 1 | துப்புரவு ஆய்வர்கள் | 12 | 5 | 7 |
| 2 | ஓட்டுநர் | 12 | 11 | 1 |
| 3 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 15 | 9 | 6 |
| 4 | மெக்கானிக் | 1 | - | 1 |
| 5 | கிளீனர் | 4 | 1 | 3 |
| 6 | களப்பணி உதவியாளர் | 1 | - | 1 |
| 7 | துப்புரவு பணியாளர் + டெங்கு, மலேரியா | 401 | 185 | 51 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணியாளர்கள் + தினக்கூலி பணியாளர்கள் | | | |
| 8 | தனியார் துப்புரவு பணியாளர்கள் | - | 283 | - |

## 26.குழந்தைகள் பிறப்பு விகிதமும் தாய்சேய் நலமும்:

2016ஆம் ஆண்டில் 4652 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் பிறப்பு 4550 ஆகும். அறிக்கையாண்டில் பிறப்பு விகிதம் 51.61 சதவிகிதமும் ஆகும். சென்ற ஆண்டில் பிறப்பு விகிதம் 55.54 சதவிகிதம் ஆகும். அறிகையாண்டில் 25 படுக்கைகள் கொண்ட நாச்சிமுத்து கவுண்டர் மகப்பேறு இல்லம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி மகப்பேறு இல்லம் மருத்துவ அலுவலராலும், மகப்பேறு உதவியாளர்களாலும், மகப்பேறு ஆயாக்களாலும் நல்ல முறையில் கவனிக்கப்பட்டு வந்துள்ளது. இங்கு ஸ்கேன் இலவசமாக பார்க்கப்படுகிறது.

**01.04.2017 முதல் 31.03.2018 முடிய**

| வ.எண். | தடுப்பு ஊசிகள் மற்றும் மருந்துகள் | ஒரு தடவை மட்டும் | முதல் முறை | இரண்டாம் முறை | மூன்றாம் முறை | பூஸ்டர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பி.சி.ஜ | 820 | - | - | - | - |
| 2 | Pentavalent | - | 820 | 820 | 819 | Nil |
| 3 | இளம்பிள்ளை வாத போலியோ சொட்டு மருந்து | 820 | 820 | 820 | 819 | 819 |
| 4 | தட்டம்மை தடுப்பூசி | 820 | - | - | - | - |
| 5 | ரண ஜன்னி தடுப்பூசி (கர்ப்பிணி தாய்மார்கள்) | - | 883 | 883 | - | - |
| 6 | ரண ஜன்னி தடுப்பூசி (10 வருடம்) | - | - | - | - | 812 |
| 7 | ரண ஜன்னி தடுப்பூசி (16 வருடம்) | - | - | - | - | 834 |
| 8 | இரும்பு சத்து மாத்திரை (குழந்தைகள்) | - | 3330 | 3330 | 3330 | - |
| 9 | இரும்பு சத்து மருந்து | - | Nil | Nil | Nil | - |
| 10 | வைட்டமின் எ திரவம் | 8100 | - | 8098 | - | - |
| 11 | இரும்பு சத்து மாத்திரை (கர்ப்பிணி தாய்மார்களுக்கு) | - | 883 | 883 | 883 | இல்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | தொண்டை அடைப்பாக் dpt 2nd Body | - | - | - | - | 1269 |
| 13 | பல்ஸ் போலியோ | - | 9800 | Nil | - | - |
| 14 | MR Vaccine Camp | - | 820 | - | - | 819 |

தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள் மேற்குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையில் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

நகர சுகாதார செவிலியர்கள் 883 கருவுற்ற பெண்களை பிரசவத்திற்கு முன் பார்வையிட்டுள்ளனர். 820 தாய்மார்களை பிரவசத்திற்கு பின் பார்வையிடப்பட்டுள்ளனர்.

ஆரோக்கியமான குழந்தைகள் வளர்ப்பது சம்பந்தமாக தாய்மார்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் குழநதைகள் நல முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் குழநதைகள் எடை விவரம் முதலியன கவனிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

அறிக்கையாண்டில் மத்திய அரசின் மானியத்துடன் இரண்டு ஐபிபி-5 மருத்துவ நிலையங்கள் இயங்கி வந்தன. அவை குடிசை வாழ் மக்கள் வசிக்கும் பகுதியான மரப்பேட்டை மற்றும் வடுகபாளையம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றில் நோயளிகள் பரிசோதனை செய்யப்பட்டு இலவச மருந்துகளும் தாய்சேய் நலப் பணிகளும், குடும்ப நலப் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 27.இறப்பு விகிதமும் கொள்ளை நோய் மற்றும் ஊறிப்போன நோய்கள்

2017-2018 ஆம் ஆண்டில் நகராட்சி எல்லைக்குள் இறப்புகள் 790 பதிவு செய்யப்பட்டன. அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட வியாதிகளில் ஏற்பட்ட இறப்பு எண்ணிக்கையும் ஆயிரத்திற்கு விகிதமும் பின்வருமாறு:-

| வ.எண். | நோய் | இறப்பு எண்ணிக்கை | சதவிதம் |
|---|---|---|---|
| 1 | வயிற்றுப்போக்கு | இல்லை | இல்லை |
| 2 | பிளேக் | இல்லை | இல்லை |
| 3 | மலேரியா | இல்லை | இல்லை |
| 4 | காய்ச்சல் | இல்லை | இல்லை |
| 5 | காலரா | இல்லை | இல்லை |
| 6 | சுவாச சம்பந்தமான சோய் | 3 | |
| 7 | பிரசவத்தின் போது இறந்தவர்கள் | 2 | - |
| 8 | குழந்தைகளின் இறப்பு | 6 | 4.4 |
| 9 | மற்றவை | 790 | 83.28 |
| | **மொத்தம்** | **800** | |

உரிய காலத்தில் பதிவு செய்யப்படாத இறப்புகளும் சம்பந்தப்பட்டவர்களிடம் 2000-ம் வருடத்திய தமிழ்நாட பிறப்பு, இறப்பு பதிவு விதிகளின்படி ஏற்பட்ட காலதாமத கட்டணம் வசூலிக்கப்பட்டு மேற்படி இறப்புகள் பதிவு செய்யும் நடைமுறை உள்ளது.

## 28. குடும்ப நலத்திட்டம்:

குடும்ப நலத்திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு அறிக்கையாண்டில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 720 ஆகும். இக்காலத்தில் 219 அறுவை சிகிச்சை செய்யப்பட்டன. தாய்மார்களுக்கும் குடும்ப நலத்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. பெண்கள் மிக குறைந்த வயதில் திருமணம் செய்து கொள்வதால் வரும் கேடுகள், வரதட்சிணைக் கொடுமைகள் பற்றியும் பேறு காலத்திற்கு பின் கடைபிடிக்க வேண்டிய சுகாதார முறைகள் பற்றியும் தாய்மார்களுடன் பெண் மருத்துவ அலுவலர் மற்றும் சுகாதாரப் பணியாளர்களால் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. 514 பெண்களுக்கு கருத்தடை சாதனமாக காப்பர் டி கருத்தடை வளையம் பொருத்தப்பட்டது. மேலும் 200 பெண்களுக்கு கருத்தடை மாத்திரைகள் வழங்கப்பட்டன. 400 ஆண்களுக்கு கருத்தடை சாதனம்(நிரோத்) வழங்கப்பட்டன.

அறிக்கையாண்டில் காலரா நோயாரால் பாதிக்கப்பட்டவர் ஒருவரும் இல்லை. சரியான நேரத்தில் முறைப்படி எடுக்கப்பட்ட தீவிர தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக நோய் பரவவில்லை. காலரா தடுப்பு மருந்தில் கையிருப்பு தயார் நிலையில் அவசர உபயோகத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் காலரா தடுப்பு ஊசி யாருக்கும் போடவில்லை.

## 29. வயிற்றுக்கடுப்பு:

அறிக்கையாண்டில் வயிற்றுக்கடுப்பு காரணமாக இறந்தவர்கள் யாரும் இல்லை. இந்நகரில் பிளேக் நோய் எதுவும் இல்லை.

## 30.பெரியம்மை

அறிக்கையாண்டில் பெரியம்மை நோயினால் தாக்குண்டு இறந்தவர்கள் எவரும் இல்லை. பெரியம்மை ஒழிக்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டதால் அறிக்கை ஆண்டில் அம்மை குத்தல், மறு அம்மை குத்தல் போன்ற பணிகள் எதுவும் செய்யப்படவில்லை.

## 31. மலேரியா:

அறிக்கையாண்டில் மலேரியா நோயினால் இறந்தவர்கள் யாரும் இல்லை. கொசுக்களை ஒழிக்கும் திட்டத்திற்கு களப்பணியாளர் பணியிடம் காலியாக இருந்ததால் இப்பணியை துப்புரவு ஆய்வாளரால் மேற்பார்வையிட்டு வரப்பட்டது. இந்நகர் கழிவுநீர் கால்வாய்களில் அப்போதைக்கப்போது Basillus Turerigngiensis வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் அபேட் மருந்து மற்றும் புகை மருந்தாக

Pyrethuim 2% extract ஆகியன கொசு ஒழிப்பு மருந்துகளாக உபயோகிக்கப்பட்டு கொசுப் புழு ஒழிப்பு நடவடிக்கை மற்றும் பூச்சிகளால் பரவும் நோய்களுக்கான தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 32. துணை விதிகள்:

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட உபவிதிகள் அமலில் இருந்தன.

1. அச்ச அருவருக்கத்தக்க வியாபாரங்கள்
2. விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு
3. சந்தையில் நடைபெறும் தொழில்கள்
4. ஆடுவதை செய்யும் இடம்
5. எலி ஒழித்தல் மற்றும் பன்றிகள் அப்புறப்படுத்துதல்
6. பிளாஸ்டிக் ஒழிப்பு, பார்த்தினியைச் செடிகள் அழிப்பது.

## 33. துப்புரவு:

இந்நகராட்சியில் 37 கட்டண கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அறிக்கையாண்டில் நகரில் காலியாகவுள்ள இடங்களிலும் சாலையோரம் இருந்த பார்த்தீனியம் செடியம் அப்புறப்படுத்தும் பணிகள் செய்யப்பட்டது.

நகரில் தினந்தோறும் சேரும் குப்பைகள், 170 தள்ளுவண்டிகள், ரிஃப்யூஸ் கலெக்டர மற்றும் காம்பாக்டர், டம்பர் பிளேசர் லாரி, டிப்பர் லாரிகள் மூலமாக அகற்றப்பட்டு வந்தது. துப்புரவு பணியாளர்கள் அனைவருக்கும் சீருடை மற்றும் காலணிகள் வழங்கப்பட்டன.

## 34. கேடும் அருவருப்பும் தரும் தொழில்கள்:

மக்கள் தொகையினையும் வசதிகளையும் அனுசரித்து உரிமையாணை வழங்கப்பட்டது. எல்லா தொழில்களும் உரிமையாணை விதிகளின்படி நடக்கின்றனவா என ஆய்வு செய்யப்பட்டது. கேடும் அருவருப்பும் தரும் தொழில்கள் மூலம் 2017-2018-ம் ஆண்டிற்கு ரூ.7,11,855/- வரவும் வந்துள்ளது.

## 35. சந்தைகளும் விழாக்களும்:

இந்நகரில் அறிக்கையாண்டில் பெரிய விழாக்கள் ஏதும் நடைபெறவில்லை. உள்ளூர் மாரியம்மன் திருவிழாவின்போதும், மற்றபடி பொதுமக்கள் அதிகமாக கூடும் கூட்டங்களின் போதும் பிரத்தியேகமான ஏற்பாடு செய்யப்பட்டு சாலைகளில் கிருமிநாசினி உபயோகப்படுத்தி சுத்தம் செய்யப்பட்டது. அடிக்கடி கிருமிநாசினி மருந்த தெளிக்கப்ட்டு சுற்றுப்புறங்கள் பாதுக்காக்கப்பட்டன.

## 36.தொழிற்சாலைகளும் தொழில்களும்

நகர எல்லைக்குள் உள்ள தொழில்சாலைகளும் தொழில் சட்டத்தின் கீழ் இயங்கி வருகிறது. தொழிற்சாலைகள் அனைத்திலும் சுகாதார வசதிகள் குறித்து துப்புரவு ஆய்வாளர்களால் அடிக்கடி ஆய்வு செய்யப்பட்டது.

## 37. தடுப்பூசி

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் இயங்கிவரும் 34 பள்ளி சத்துணவு மையங்களில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டது. இந்த சத்துணவு மையங்கள் துப்புரவு ஆய்வாளர்களால் அடிக்கடி பார்வையிடப்பட்டு சுற்றுப்புறங்களை சுகாதார முறைப்படி பராமரிக்கப்பட்டது.

## 38.கலவை உரம்:-

நகரில் அன்றாடம் சேரக்கூடிய குப்பைகளை பொதுசுகாதாரப் பிரிவு வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தி, நகரிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நல்லூர் கிராமத்தில் அமைந்திருக்கும் நகராட்சி உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இந்நகராட்சிக்கு நல்லூர் கிராமத்தில் 16.68 ஏக்கரும், ஆச்சிப்பட்டி கிராமத்தில் 10.28 ஏக்கரும் ஆக மொத்தம் 26.96 ஏக்கர் உரக்கிடங்கிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. 39.50 இலட்சத்திற்கு சுற்றுப்புறவேலி சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஜே.சி.பி இயந்திரம் வாங்கப்பட்ட தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. உரக்கிடங்கு மாசுக்கட்டுப்பாடு வாரிய தடையின்மைச்சான்று பெறப்பட்டுள்ளது. நகரில் சராசரியாக தினசரி 60 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு கலவை உரக்கிடங்கில் கொட்டப்பட்டு சேகரிக்கப்படுகிறது. கலவை உரம் IWMUST என்ற தனியார் நிறுவனம் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. 31.10.2007 ஆம் தேதிய நகரமன்ற தீர்மானத்தில் இயற்கை உரம் தயாரிக்க 5 ஏக்கல் நிலத்தில் 20 ஆண்ட காலத்திற்கு வருடம் ரூ.500/- வீதம் 5 ஏக்கர் நிலத்திற்கு ரூ.2,500/- குத்தகையாக செலுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 3 டம்பர் பிளேசர் லாரிகளும், சிறிய லாரி -1-ம், டிப்பர் லாரி-3, Refuse collector com capactor லாரி 2-ம் மற்றும் ஜே.சி.பி 1-ம் குப்பை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

## 39. விலங்கினக் கட்டுப்பாடு

தெரு நாய்களை பிடித்து குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து மீண்டும் அதே இடத்தில் விட வேண்டும் என அரசினரின் 18.01.2007-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 10-எண் ஆணையில் அன்று அரசு உத்திரவு பிறப்பித்தது. மேற்படி அரசு உத்தரவில் ஒரு நாய் ரூ.700/- வீதம் செலவு செய்து குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யலாம் எனவும் 50% செலவி விலங்குகள் நல வாரியமுமம, மீதமுள்ள 50% செலவு தொகையினை நகராட்சியும் செலவு செய்து கொள்ள வேண்டம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி 2017-2018-ம் ஆண்டில் பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குள் 500

தெருநாய்கள் பிடித்து குடும்ப கட்டுபாடு அறுசை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. நகரமன்ற அனுமதி பெற்று அதற்காக ரூ.3,50,000/- செலவிடப்பட்டுள்ளது.

## 40. சாக்கடைத் திட்டம்

பாதாள சாக்கடைத் திட்டம் பொள்ளாச்சி நகரப்பகுதியில் நடைபெற்று வருகிறது.

## 41. தீ தடுப்பு நடவடிக்கைகள்

இந்நகராட்சியில் தீ தடுப்பு முன் நடவடிக்கையாக அலுவலகத்தில் முன்பக்கம் பக்கெட்டுகளில் தண்ணீர் மற்றும் மணல் நிரப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தவிர நகர நல அலுவலகம், நகரமைப்பு பிரிவு கணக்குப்பிரிவு, பொதுப்பிரிவு மற்றும் பொதுபணி பொறியர் அலுவலகங்கள் ஆகிய அனைத்திற்கும் தனித்தனியாக தீயணைப்பு கருவிகள் வைக்கப்பட்டுள்ளன.

## 42. பொள்ளாச்சி நகராட்சியும் சுழற்கழகமும் இணைந்து செயல்படுத்தும் நவீன மின் மயானத்திட்டம்

மனித வாழ்க்கையில் மரணம் என்பது தவிர்க்க முடியாதது. வாழும்போது சுகாதாரத்தை கடைபிடிக்கும் மனிதனுக்கு அவன் இறந்த பின்னர் அவன் உடலைப் புதைப்பது அல்லது எரியூட்டுவது போன்ற செயல்கள் மிகவும் சுகாதாரக் கேடான முறையில் சுற்றுப்புறச்சூழலை மாசுப்படுத்தியும் மற்றும் பல்வேறு சிரமங்களுடன் நடைபெற்று வருகின்றன.

இதை மாற்றி மனித உடலை சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்காத வகையில் எவ்வித சிரமமும் இன்றி எரியூட்டுவதற்கு பொள்ளாச்சி நகராட்சியும் பொள்ளாச்சி சுழற்கழகமும் (ரோட்டரி கிளப்) இணைந்த உடுமலை சாலையில் நவீன மின்மயானமும் நிறுவப்பட்டுள்ளது. இதற்கு பொள்ளாச்சி நகராட்சி ஒரு ஏக்கர் 57 சென்ட் இடத்தை இலவசமாக வழங்கியுள்ளது. தேவையான தண்ணீரையும் நகராட்சியினால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ராஜு அவர்களால் வழங்கப்பட்ட தொகுதி வளர்சச் நிதி, சுழற்கழகங்கள் வியாபார தொழில் நிறுவனங்கள், தொண்டு மன்றங்கள் தாராளமாக வழங்கிய நன்கொடைகளைக் கொண்டு மொத்தம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் நவீன மின் மயானம் அமைக்கப்பட்டு 27.02.2000 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நகராட்சியும், சுழற்கழகமும் இணைந்த நவீன மின் மயானத்தை ஏற்படுத்தி பராமரித்து வருவது இந்தியாவிலேயே முதன் முறையாக பொள்ளாச்சி நகராட்சியில் நிறைவேற்றி சாதனை படைத்துள்ளது என்பது இந்நகரமன்றத்திற்கு பெருமை தரக்கூடியது ஆகும்.

## 43.பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் - சிக்கன நாணய சங்கம்

இத்தலைப்பிற்கு ரூ.2,38,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சியில் பதிவு செய்துள்ள 10 குழக்களுக்கு 119 நபர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.2,000/- வீதம் சுழல் நிதி மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

## 44.சமுதாய அமைப்பு

இத்தலைப்பிற்கு 2013-2014 ஆம் ஆண்டிற்கு ரூ.5.71 ஒதுக்கப்பட்டு நிதி வரப்பெற்றுள்ளது. சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு பல்வேறு தெழில பயிற்சிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் டெங்கு மற்றும் பன்றிக்காய்ச்சல் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது.

**. நிர்வாக ஒதுக்கீடு**

இத்தலைப்பிற்கு நிதி ஒதுக்கீட வரப்றெவில்லை.

**.தகவல் - கல்வி**

இத்திட்டத்திற்கு ரூ.1,22,146/- நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளது. இத்தொகை பல்வேறு விழிப்புணர்வு டெங்கு மற்றும் பன்றிக்காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சடித்து விநியோகிக்கப்பட்டது.

## 45.திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கூறுகள்:

1. **முதற்கட்ட சேகரிப்பு**

   (அ) குப்பை சேகரித்தல்

   (ஆ) குப்பைகளை தரம் பிரித்தல்

**1. முதற்கட்ட சேகரிப்பு :–**

**(அ) குப்பை சேகரித்தல்:–**

பொள்ளாச்சி நகராட்சியில் மொத்தம் 36 வார்டுகள் உள்ளன. மொத்த மக்கள் தொகை 93,185 ஆகும். நகரில் 13.87 கி.மீ நீளமுள்ள 742 தெருக்கள் உள்ளன. வீடுகளின் எண்ணிக்கை 26,493 ஆகும். நகரில் தினசரி மொத்தம் 60 டன் திடக்கழிவு உருவாகிறது. நகரில் குப்பைகள் சேகரிக்கும் பணி கீழ்க்கண்ட முறைகளில் நடைபெற்று வந்தது.

**வீடு வீடாக சென்று குப்பை சேகரித்தல்**

இந்நகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடுகளில் இத்திட்டத்தின்படி வீடு வீடாக சென்று குப்பைகள் வாங்கப்பட்டு வந்தது.

**(ஆ) குப்பைகளை தரம் பிரித்தல்**

வீடு வீடாக சென்று வாங்கும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை எனத் தரம் பிரிக்கப்பட்ட மக்கும் குப்பைகளை குப்பை கலன்களில் (டம்பர் பிளேசர் பெட்டியில்) கொட்டப்பட்டு மக்காத குப்பையை அந்த அந்த வார்டு அலுவலகங்களில் சேகரம் செய்யப்பட்டு பின்னர் மொத்தமாக ஏலம் விடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு நகராட்சி கருவூலகத்தில் பணம் செலுத்தப்பட்டது.

**<u>இரண்டாம் கட்ட சேகரிப்பு</u>**

வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரிக்கப்படும் குப்பைகள் குப்பை கலன்களில் சேர்க்கப்பட்டு வந்தது.

குப்பைகள் நிறைந்த குப்பைக் கலன்களை உரங்கிடங்கிற்கு கொண்டு செல்லும் முன் கணினி எடை மேடையில் எடை போடப்பட்டு குப்பைகளை உரங்கிடங்கிற்கு எடுத்துச் செல்வதற்கு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| டம்பர் பிளேசர் வாகனம் | – | 2 |
| டிப்பருடன் கூடிய வாகனம் | – | 4 |
| காம்பேக்டா | – | 2 |
| ஜே.சி.பி | – | 1 |
| டிராக்டர் | – | 1 |
| டா டா ஏஸ் | – | 2 |

**<u>அண்ணா பேருந்து நிலையங்கள்</u>**

அண்ணா மத்திய பேருந்து நிலையத்தில் 10 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு காலை மாலை இருவேளைகள் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் பேருந்து நிலையங்களில் குப்பை பெருக்குதல், சேகரித்தல், குப்பைகளை குப்பை கொள்கலன்களில் சேர்த்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாதம் ஒரு முறை பேருந்து நிலையத்தை இரவு நேரத்தில் தண்ணீர் விட்டு சுத்தம் செய்யப்பட்டது. அண்ணா மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடங்களை தினசரி இரண்டு முறை சுத்தம் செய்யப்பட்டு கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது.

**<u>காந்தி வாரச்சந்தை</u>**

காந்தி வாரச்சந்தை 10 துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் தினசரி கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்தல், பெருக்குதல் போன்ற பணிகள் மேற்படி துப்புரவு பணியாளர்களை கொண்ட மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>பேருந்து நிலையங்கள்</u>**

அண்ணா மத்திய பேருந்து நிலையத்தில் 10 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு காலை மாலை இருவேளைகள் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் பேருந்து நிலையங்களில் குப்பை பெருக்குதல், சேகரித்தல், குப்பைகளை குப்பை கொள்கலன்களில் சேர்த்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>காந்தி வாரச்சந்தை</u>**

காந்தி வாரச்சந்தை துப்புரவு பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் தினசரி கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்தல், பெருக்குதல் போன்ற பணிகள் மேற்படி துப்புரவு பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த சந்தையில் தினசரி 3 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு நகராட்சி லாரி மூலம் எடுத்து செல்லப்படுகிறது.

**<u>மருத்துவ கழிவுகள்</u>**

இந்நகராட்சியிலுள்ள 36 தனியார் மருத்துவமனைகளில் சேகரமாகும் மருத்துவக் கழிவுகளை தனியார் நிறுவனம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது.

**<u>குப்பைகளை அகற்றுவதற்கு சேவை வரி கட்டணம்</u>**

இந்நகரட்சியிலுள்ள அனைத்து பெரிய, சிறிய திருமண மண்டபங்கள் பெரிய உணவகங்கள், டிபார்மெண்டல் ஸ்டோர்ஸ், திரையரங்குகள், இறைச்சிக்கடைகளில் அதிகளவில் உருவாகும் குப்பைகள் மற்றும் கழிவுகளை நகராட்சி லாரி மூலம் அகற்றப்படுகிறது. இதற்கென நகரமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட சேவை கட்டணம் 6 மாதத்திற்கொரு முறை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**<u>திடக்கழிவு மேலாண்மை திட்டம் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம்</u>**

1. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.
2. விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.
3. நகரின் முக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பிளக்ஸ், பேனர்கள் வைக்கப்பட்டுள்ளது.

## 4.வருவாய் வரும் இனங்கள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் கீழே குறிப்பிட்டுள்ள இனங்கள் வருவாய் வரக்கூடியதாக இருந்து வருகின்றது.

1. வாராந்திர சந்தை
2. தினசரி அங்காடிகள்
3. பேருந்து நிலையம்
4. வணிக வளாகம்
5. லாரிப்பேட்டை
6. நவீன கட்டண கழிப்பிடங்கள்
7. ஆடுவதைக் கூடம்
8. பலன் தரும் மரங்கள்
9. நகராட்சி அலுவலர் குடியிருப்பு வீடுகள்
10. மிதிவண்டி நிலையம்

## 46. போக்குவரத்து

அண்ணா மத்திய பேருந்து நிலையம் மற்றும் அண்ணா கூடுதல் பேருந்து நிலையம் உள்ளது பேருந்து நிலையத்திற்குள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தினராலும் மற்றும் தனியார் துறையினராலும் நடத்தப்பட்டு வருகின்றது. நகருக்கு நகரை சுற்றியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் முறையான வழித்தடங்கள் வாயிலாக பேருந்தகள் இயக்கப்பட்டு வருகின்றது. இது தவிர கேரள அரசு போக்குவரத்து கழக பேருந்துகளும் இந்நகர் வழியாக செல்கின்றன. தினசரியாக பேருந்துகள் இந்கராட்சி பேருந்து நிலையத்திற்குள் 450 முறைகள் வந்து செல்கின்றன. இந்நகரத்தில் தொடர்வண்டி நிலையம் உள்ளது. செயல்பாடகள் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டு மாநிலம் முழுவதுமுள் இடங்களுக்கு இங்கேயே பணச்சீட்டுகள் பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நகரிலிருந்து திண்டுக்கல், மதுரை, திருவனந்தபுரம் மற்றும் திருச்செந்தூர் போன்ற இடங்களுக்கான தொடர் வண்டிகள் சென்று வந்தது. தற்போது அகல இருப்பு பாதை அமைக்கும் பணிகள் முடிவுற்று பொது மக்கள் மற்றும் வியாபாரிகளின் பயன்பாட்டிற்கு தொடர் வண்டி இயக்கம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 47. வாராந்திரச்சந்தை

இந்நகராட்சிக்கு சொந்தமான 30.78 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில்;காந்தி வாரச்சந்தை" என்ற பெயரில் வாரச்சந்தை நகராட்சியின் பராமரிப்பில் இயங்கி வருகிறது. இச்சந்தையானது தென் இந்தியாவிலேயே

மிகப்பெரிய சந்தையாகும். இது ஒவ்வொரு வியாழக்கிழமையன்று இயங்கி வருகிறது. இச்சந்தையில் பொது மக்களின் நலனுக்காக நவீன கழிப்பிடங்கள் முழுமையான தண்ணீர் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் சந்தை நுழைவாயில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை பொது ஏலத்தில் விடப்பட்டதில் ரூ.43,22,220/- வருமானம் கிடைக்கப்பட்டுள்ளது.

காந்திவாரச்சந்தையில் ஏ.பி.சி மற்றும் "டி" பிளாக்குகளில் 72 கடைகள் கட்டப்பட்டு இவைகளையும் பொது ஏலத்தில் விடப்பட்டதில் அறிக்கையாண்டில் ரூ.62,04,000/- வருமானம் கிடைக்கப்பட்டுள்ளது.

காந்தி வாரச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள காலியிடங்களில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் நிலவரி வசூல் செய்யும் உரிமத்தை பொது ஏலத்தில் விடப்பட்டதில் ரூ.24,48,444/- வருமானம் கிடைக்கப்பட்டுள்ளத- இச்சந்தையில் விழும் கால் நடைகளின் சாணம், ஆடு அறுக்குமிடங்களில் விழும் கழிவுகள், தேங்காய் மட்டை ஆகியவைகளை BIO GAS க்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இந்நகரில் அறிக்கை ஆண்டில் தனியாரால் சந்தை ஏதும் நடத்தப்படவில்லை.

**<u>48. ஆடுவதை செய்யுமிடம்</u>**

காந்தி வாரச்சந்தையில் ஆடு மற்றும் மாடு வதை செய்யுமிடங்கள் அமைந்துள்ளது. அதன் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.2,06,388/- வருமானம் கிடைக்கப்பெற்றள்ளது. மேலும் இதன் அருகில் மீன் அங்காடி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**<u>49. லாரிப்பேட்டை</u>**

காந்தி வாரச்சந்தை கிழபுறத்தில் லாரிப்பேட்டை ஒன்று இயக்கப்பட்டு வருகிறது. இவ்விடத்தில் அனைத்து மாநிலங்களுக்கும் செல்லும் லாரிகள் வந்த செல்கின்றன. அதன் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.8,39,160/- வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

**<u>50. தினசரி காய்கறி அங்காடி</u>**

காந்தி வார சந்தையின் மேற்கு பகுதியில் தினசரி காய்கறி மொத்த வியாபார அங்காடியானது அமைந்தள்ளது. இவ்விடத்தில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கடைகள் அதன் வாயிலான அறிக்கையாண்டில் பொது துறை மூலம் வசூல் செய்யப்பட்டதில் ரூ.4,52,68,260/-ம் வருமானம் கிடைக்கப்பெற்றள்ளது.

## 51. தேர்நிலைய வீதியில் அமைக்கப்பட்டுள்ள தினசரி காய்கறி அங்காடி

நகரின் கிழக்குப் பகுதியான தேர்நிலையத்தில் தினசரி காய்கறி சில்லறை வியாபார அங்காடி ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் 35 கடைகளுடன் கட்டப்பட்டு 1984 ஆம் ஆண்டு முதல் பொது மக்களின் பயன்பாட்டிற்கான திறந்து விடப்பட்டது. இந்த காய்கறி அங்காடி மற்றும் கடைகளின் மூலம் அறிக்கையாண்டில் ரூ.25,08,408/- வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இது தவிர (36 கடைகளுக்கு) ரூ.16,24,000/-ம் தேர்நிலையத்தின் அருகாமையிலுள்ள சத்திரம் வீதியில் 10 கடைகள் கட்டி துணை வணிக வளாகம் நிறுவி அதன் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.7,80,000/- வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

## 52. திரு.வி.க காய்கறி அங்காடி

வெங்கடேசா காலனி உயர்நீர் தேக்க நிலையத்திற்கு எதிர்புறமுள்ள நகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் வாடகையை மொத்தமாக வசூல் செய்யும் உரிமத்தினை பொது ஏலத்தில் விடப்பட்டதில் அறிக்கையாண்டில் ரூ.25,35,170/- வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

## 53.அங்காடி

நகராட்சி கடைவீதி துணை வணிக வளாகத்தின் அருகில் நகராட்சிக்க சொந்தமான காலியிடத்தில் ”பூ “ அங்காடி இயங்கி வருகிறது. இதன் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.6,52,080/- வருமானமாக கிடைக்கப்பெற்றுள்ளது.

## 54.அண்ணா மத்திய பேருந்து நிலையம்

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.15,35,000/- ம் மாநில அரசிடம் கடன் பெற்று மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் 07.04.1985ம் நாளன்று நிலையம் துவக்கப்பட்டது. “ஏ” தர பேருந்து நிலையத்திற்கான சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. பயணிகளின் நன்மைக்காக பேருந்து நிலையத்தின் வடபுறம், கிழபுற பகுதிகளில் சிமெண்ட் கூரைகள் மற்றும் பயணிகள் அமர்வதற்கான சிமெண்ட இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளது. இலவச சிறுநீர் கழிப்பிடம் அமைக்கப்பட்டு சுகாதார வசதியுடன் பேணப்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தாரால் அலுலவக அறை துவக்கி மாநில மற்றும் வெளி மாநிலங்களுக்கு செல்லும் பேருந்துகளுக்கு இருக்கை முன் பதிவு செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வளாகத்தில் புற காவல்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இப்போது நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைகள் மூலம் ரூ.1,17,28,200/- வரவினமும் பேருந்துகளுக்கு வசூலிக்கப்படும் கட்டணம்

மூலம் ரூ.22,78,155/- வரவினமும் பொது ஏலத்தில் விடப்பட்டதில் அறிக்கையாண்டில் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

## பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேருந்து நிலையம்

பொள்ளாச்சி நகராட்சியின் தற்போதுள்ள அண்ணா பேருந்து நிலையம் பாலக்காடு சாலையில் 2.24 ஏக்கர் பரப்பளவில் 50 பேருந்துகள் நிற்கும் வகையில் அமைக்கப்பட்டு 1985 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இப்பேருந்து நிலையம் "ஏ" கிரேடு ஆகும்.

பொள்ளாச்சி நகரம் மற்றம் அதனைச் சுற்றியுள்ள பதினைந்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும் வியாபார பகுதிகளாக உள்ளதால் பேருந்து நிலையத்திற்கு தினசரி 450 முறைகள் பேருந்துகள் வந்த செல்வதால் பேருந்து

நிலையத்திற்குள் பேருந்துகள் நிறுத்த இடவசதி இல்லாததால் தற்போதுள்ள பேருந்து நிலையத்திற்கு எதிர்புறம் உள்ள வருவாய் துறைக்குச் சொந்தமான காலி இடத்தில் கூடுதல் பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.341 நாள்.30.05.2005-ல் 1.80 ஏக்கர் பரப்பளவு நிலம் பொள்ளாச்சி நகராட்சிக்கு மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டது.

இந்த இடத்தில் கூடுதல் பேருந்த நிலையம் 15 தொலைதூர பேருந்துகள் மற்றும் நகர பேருந்துகள் வந்து நின்று செல்லும் வகையில் ரூ.175.00 லட்சம் மதிப்பீட்டில் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு திட்டப்பணிகள் செயல்படுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 12.11.2007-ம் தேதியன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் துவக்கப்பட்டு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சல் அவர்களால் 27.10.2009-ம் நாள் பேருந்து நிலையம் திறக்கப்பட்டு 15.11.2009 முதல் மக்கள் பயன்பாட்டுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பேருந்து நிலையத்திற்கு தேவையான இதர வசதிகளான கான்கிரீட் ஓடு தளம், நவீன கட்டண கழிப்பிடம், இலவச கழிப்பிடம், பயணியர் இருக்கை வசதிகள், குடிநீர் வழங்கும் சாதனங்கள், பேருந்து வந்து செல்லும் விபர மின்னனு பலகை அமைத்தல் ஆகிய வசதிகளையும் செய்ய உத்தேசிக்கப்பட்டு மொத்தம் ரூ.375.78 லட்சம் செலவில் கூடுதல் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் உபயோகத்திற்கு 27.10.2009 முதல் திறந்து விடப்பட்டது. இத்திட்டப்பணி நகராட்சி பொறியியல் துறை வாயிலாக செய்து முடிக்கப்பட்டது.

இக்கூடுதல் பேருந்து நிலையத்திற்கு 07.10.2009-ம் தேதியில் ISO 9001 : 2008 தரச்சான்று பெறப்பட்டுள்ளது.

## 55 கடைகள்

இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகள் கீழே குறிப்பிட்டுள்ள படி உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | வெங்கட்ரமணன் வழி கடைகள் 19 எண்ணிக்கை | = | 1328000/- |
| 2. | நந்தனார் காலனி பகுதியில் அமைந்துள்ள கடைகள் 10 எண்ணிக்கை | = | 480000/- |

| | | | |
|---|---|---|---|
| 3. | பெருமாள் செட்டி வீதி கடைகள் 24 எண்ணிக்கை | = | 1265758/- |
| 4 | காந்தி மார்க்கெட் வெங்காய கடைகள் 47 எண்ணிக்கை | = | 1904148/- |
| 5 | மரப்பேட்டை வீதி 11 கடைகள் | = | 338373/- |
| 6 | புதிய திட்ட சாலை 6 கடைகள் | = | 122771/- |
| | **மொத்தம்** | | **5479050/-** |

மேற்கண்ட கடைகளின் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.54,79,050/- வருமானமாக வரப்பெற்றள்ளது.

## 56. நவீன கட்டண கழிப்பிடங்கள்

இந்நகராட்சிக்கு சொந்தமான பின்வரும் இடங்களில் கட்டண கழிப்பிடங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | அண்ணா மத்திய பேருந்து நிலையம் | 1476108/– |
| 2. | லாரிப்பேட்டை | 176730 |
| 3. | காந்தி வாரச்சந்தை ‘சி’ பிளாக் பகுதி | 96470 |
| 4. | தெப்பக்குளம் வீதி | நீக்கப்பட்டது |
| 5. | சுப்பிரமணிய சுவாமி கோவில் வீதி | 155169 |
| 6. | நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தின் மேற்கு பகுதி | 18154 |
| 7. | தேர்நிலை தினசரி காய்கறி அங்காடி | - |
| 8. | காந்தி வாரச்சந்தை நாளங் காடி வடபுறம் | நீக்கப்பட்டது |
| 9. | பேருந்து அண்ணா நூற்றாண்டு பேருந்து நிலையம் | 907725/– |

மேற்கண்ட நவீன கட்டண கழிப்பிடங்கள் சுகாதார வசதியுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன்படி பொது ஏலத்தில் விடப்பட்டதில் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.28,30,326/- வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது.

## 57 பலன் தரும் மரங்கள்

இந்நகராட்சியில் எல்லைக்குள் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பலன் தரும் மரங்களின் பலன்கள் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்தினை பொது ஏலத்தில் விடப்பட்டதில் ரூ.1,19,125/- வருமானம் வரப்பெற்றுள்ளது.

## 58. நகராட்சி அலுவலர் குடியிருப்பு வீடுகள்

இந்நகராட்சியில் சுப்பம்மாள் தெருவில் நகராட்சி ஆணையாளர், நகர்நல அலுவலர், பொறியாளர், நகரமைப்பு அலுவலர் ஆகியோருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய குடியிருப்பு கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உயர் நீர்த்தேக்க நிலையத்தில் இனம் பொறியருக்கு ஒரு குடியிருப்பும் கட்டப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறது.,இதன் வாயிலாக அறிக்கை ஆண்டில் ரூ.96429/- வாடகையாக வரப்பெற்றுள்ளது.

## 5. நகரமைப்பு

## அ. நில மேம்பாடு

### 59. பணியாளர்கள்

நகரமைப்பு பிரிவில் கீழ்க்கண்ட நிலையான பணியாளர்கள் பணிபுரிந்த வந்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | முதுநிலை நகரமைப்பு அலுவலர் | = | 1 |
| 2. | உதவி நகரமைப்பு அலுவலர் (2ம் நிலை) | = | 1 (காலியிடம்) |
| 3. | நகரமைப்பு ஆய்வர்கள் | = | 4 (1 காலியிடம்) |
| 4. | அலுவலக உதவியாளர்கள் | = | 2 (2 காலியிடம்) |
| 5. | சங்கிலியாளர்கள் | = | 4 |

திரு.மா.கோபால் அவர்கள் 01.04.2018 முதல் 31.03.2019 வரை நகரமைப்பு அலுவலராக அறிக்கை ஆண்டில் பணியாற்றி வந்துள்ளார்.

தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 19(4)-ன் கீ அரசாணை எம்.எ1.எண்.635 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்.16.03.1974-ன் படி பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி பொள்ளாச்சி உள்ளூர் திட்டப்பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### 60. முழுமைத்திட்டம்(Master Plan)

பொள்ளாச்சி உள்ளூர் திட்டக்குழுமம் பகுதிக்கென முழுமைத திட்டம் தயாரிக்கப்பட்டு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அரசாணை எண்.23 நாள்.05.01.1990-ல் அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின்னர் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 28-ன் கீழ் மறு ஆய்வு செய்யப்பட்டு அரசின் மறு இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு மறு ஆய்வு முழுமைத் திட்டம் வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சித்துறை அரசாணை எண்.93 நாள்.18.03.2005-ல் இறுதி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

### 61. விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள்

இந்நகராட்சிப் பகுதியில் 16 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் அரசினரால் அறிவிக்கப்பட்டு அவைகளுக்கான பணிகள் செயல்பாட்டில் உள்ளது.

அவைகளில் 13 அங்கீகாரம் பெறப்பட்டவையாகும். 1 வரைவு நிலையில் உள்ளன. ஒவ்வொரு திட்டத்தின் நிலையும் செயலாக்கம் பெற்ற விபரங்களும் வருமாறு.

### கோட்டூர் சாலை விரிவு மேம்பாட்டுத் திட்டம்

85.46 ஏக்கர் பரப்பினை கொண்ட இத்திட்டமானது அரசாணை எண்.2450 நாள்.15.12.1969-ல் அரசால் அங்கீகரிக்கப்பட்டதாகும். 1969 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் நாளிதழில் 24ம் நாள் பகுதி 2 பிரிவு 65 முதல் 98 வரையிலான பக்கங்களில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு 30 வருடங்களுக்கு மேலானதாலும் மறு ஆய்வ செய்யப்பட்டு நகர ஊரமைப்பு இயக்குநர் சென்னை மறு இணக்கத்திற்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## பல்லடம் ரோடு விரிவு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் பரப்பளவு 262.35 ஏக்கர். இத்திட்டமானது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.1179 நாள்.26.06.1973 அங்கீகரிக்கப்பட்டு தமிழக அரசு நாளிதழில் 24.10.1973-ல் அறிவிப்பு எண் 4951 பகுதி 2 பிரிவு பக்கம் 2லிருந்து 26 வரையில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் மேற்படித் திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### விரிவு மேம்பாடுத் திட்டம் எண் 04

இத்திட்டத்தின் பரப்பளவு 229.54 ஏக்கராகும். ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 867 நாள். 27.04.1968-ல் அங்கீகரிக்கப்பட்டு தமிழக அரசிதழ் நாள்.25.12.1968, அறிவிப்பு எண்.2 எண்.424/1968 பிரிவு 2 பகுதி 2-ன் பகுதி 2 முதல் 27 வரையில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு 30 வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் நில உபயோகமாற்றங்கள் குறிக்கப்பட்டு மறு ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 05

இத்திட்டத்தின் பரப்பளவு 189.75 ஏக்கராகும். இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 27.04.1968 தேசிய 866ம் எண் அரசாணையில் அங்கீகரிக்கப்பட்டதாகும். அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டத்தை தமிழக அரசிதழில் 20.11.1968-த் தேசிய 496 முதல் 516 வரையிலான பக்கங்களில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இதனிடையில் எ1எ1 என்கிற 66 அடி திட்டசாலையின் நகரளவு எண் 496/பாகத்தில் ஒரு பகுதியினை நிலச் சொந்தக்காரர் தானமாக கொடுத்துள்ளார். ஏகைய பகுதிக்கு கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டமானது 14.12.2009-ல் ஒருங்கிணைந்த திட்ட மாற்றத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 06

இத்திட்டத்தின் பரப்பளவு 87.00 ஏக்கராகும். இத்திட்டம் சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் 20.10.1978-ம் தேதிய ந.க.எண்.14589/79 எண் கடிதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசிதழ் 06.12.1978-ம் தேதிய 498 ம் எண் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு ந.ஊ.சட்டம் 1971 பிரிவு 33(1)-ன் கீழ் ஒருங்கிணைந்த திட்ட மாற்றத்திற்கு நேராய்வு செய்து புதிதாக தயாரித்து (ந.ஊ.இ, சென்னை) அனுப்பக் கேட்டுக்கப்பட்டுள்ளதால் மேற்படி விபரம் நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், கோவை அவர்களின் நடவடிக்கையில் உள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 07

இத்திட்டத்தின் பரப்பளவு 152.43 ஏக்கராகும். இத்திட்டம் சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் தனது 03.01.1979 -ம் தேதிய 14591/78, 582 எண் கடிதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட இத்திட்டமானது தமிழக அரசிதழ் நாள்.11.04.1979 பாகம் 6 பிரிவு 1 பக்கம் 44-ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

எப்9 எப்9 40 திட்டச்சாலை ஒரு பகுதி நில சொந்தக்காரர்களால் அமைக்கப்பட்டு விட்டது. சிசி 80 அடி திட்டச்சாலையில் ஒரு பகுதி ஜிஜி, ஜி3, ஜி3, ஜி4, ஜி4, ஜி5, ஜி5 30 அடி திட்டச்சாலைகள் ஆகியவை அடங்கியுள்ள நகரளவு எண்கள் 444, 450/1, 450/எ பகுதியில் மனைப்பிரிவு விண்ணப்பம் நகர்

ஊரமைப்பு இயக்குநருக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் அளிக்கும் பொருட்டு உரிமையாளரால் நன்னிலை வரி ரூ.13,400/- அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளதால் மேற்படி சாலைகள் அனைத்தும் நில உரிமையாளரால் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு துறை, இயக்குநர் சென்னை அவர்களின் இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 08

இத்திட்டத்தின் பரப்பளவு 160.83 ஏக்கராகும். இத்திட்டத்திற்கு சென்னை நகர் ஏரமைப்பு இயக்குநர் தனது 14.11.1978-ம் தேதிய 14590/78-582 எண்ணிட்ட கடிதத்தில் ஒப்புதல் அளித்துள்ளார். தமிழக அரசிதழில் 27.12.1978-ம் தேதியில் பிரசுரம் பகுதி பக்கம் 53-ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. நான்கில் ஒரு பகுதியை பொள்ளாச்சி வீடு கட்டும் சங்கத்தால் அபிவிருத்தி செய்துள்ளார். தனியார் மனைப்பிரிவுகள் வரப்பெற்றுள்ளதால் மீதமுள்ள சாலைகளையும் தனியார்களே அபிவிருத்தி செய்து வருகிறார்கள். இத்திட்டத்தின், தென்பகுதியும், வடபகுதியும் தனியர் மனைப்பிரிவுகளாலும், கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தினராலும் அபிவிருத்தி செய்யப்படும் நிலை உள்ளன. இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு அரசின் மறு இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 09

இத்திட்டத்தின் பரப்பளவு 154.28 ஏக்கராகும். இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசினரால் 20.06.1978-ம் தேதிய எண்ணிட்ட அரசாணையில் அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டப்பகுதி பெரும்பாலும் தொழில் பிரவேசமாகவே உள்ளது. இத்திட்டப்பகுதி தற்போது 30 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் நிலையில் நில உபயோக மாற்றங்கள் குறிக்கப்பட்டு மறு ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 10

இத்திட்டத்தின் பரப்பளவு 104.42 ஏக்கராகும். இத்திட்டம் சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 05.04.1980-ம் தேதிய 20714/80 எண் கடிதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்ட இத்திட்டத்தை தமிழக அரசிதழில் 20.10.1980-ம் தேதிய பாகம் 6 பாகம் 1 பக்கம் 499-ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளத. இத்திட்டத்தில் சேரன் நகர் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கியதில் நிறைய திட்டமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்தில் நில கையகப்படுத்துதல் தற்போது அவசியமில்லை. இத்திட்டம் தற்போது மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களின் மறு இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 11

இத்திட்டத்தின் பரப்பளவு 192.36 ஏக்கராகும்.இத்திட்டத்தை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.1649, நாள்¦.17.08.1983 ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டத்தை தமிழக அரசிதழ் 21, எண்..5455, நாள்..14.11.1983 ல்பாகம் 2-ல் பிரிவு 1-ல் 29 முதல்¦ 45 வரை பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

பொள்ளாச்சி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தினர் திட்டத்தில் உள்ளடங்கிய விவசாய பகுதியில் இடங்களை வாங்கி வீடு கட்டும் மனைகளாகப் பிரித்து அபிவிருத்தி செய்து வருகின்றனர். ஆகையால் நிலம் கையகப்படுத்துதல் ஆர்ஜிதம் செய்து பாதை வசதிகள் செய்ய தேவையில்லை. இத்திட்டம் தனியார் மனைப்பிரிவுகளாலும், தொழிற்சாலை பகுதிகளாலும் திட்ட அடிப்படையில் அபிவிருத்தி அடைந்து வருகிறது. நலச் சந்தக்காரர்கள் இத்திட்டம் அபிவிருத்தி அடைய முயற்சி செய்து வருகின்றனர். இத்திட்டப்பகுதியில் 90 சதவீதப்பகுதி வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்றன. இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 12

இத்திட்டத்தின் பரப்பளவு 215.50 ஏக்கராகும். இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.46, நாள்.05.01.1977-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சுமார் 110 ஏக்கர் பரப்பளவில் பொள்ளாச்சி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தினர் மனைப்பிரிவுகளாக பிரித்து அபிவிருத்தி செய்துள்ளனர். தனியார் மனைப்பிரிவுகளாகவும் அபிவிருத்தி அடைந்துள்ளன.

மீதமுள்ள பகுதிகள் யாவும் விவசாய பூமியாகும். ஆகையால் உடனடி அபிவிருத்திகள் தற்போது அவசியமில்லை. இப்பகுதி கூடிய விரைவில் தனியார் மனைப்பிரிவுகளால் அபிவிருத்தி அடையும் வாய்ப்புகள் உள்ளது. எனவே, தற்போதைக்கு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் சென்னை அவர்களின் மறு இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 13

இத்திட்டத்தின் பரப்பளவு 219.50 ஏக்கராகும். இத்திட்டம் சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் 21.10.19802-ம் தேதிய ந.க.எண்.26910/89/எ6 எண்ணிட்ட கடிதத்தில் அங்கீகரிக்கப்பட்டதாகும். மேற்படி திட்டத்தை தமிழக அரசிதழில் 17.11.1980.ம் தேதிய பாகம் 6 பிரிவு 1556வது பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. உடுமலை சாலையின் இருபக்கவாட்டு பகுதிகள் மட்டுமே தனியார் மனைப்பிரிவுகளின் அடிப்படையில் அபிவிருத்தி அமைந்துள்ளது. இத்திட்டத்தில் பெரும்பகுதி பல்வேறு உபயோகங்களுக்கென உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் அபிவிருத்தி அடைந்தும் வருகிறது. ஆகையால் உடனடி அபிவிருத்திக்கு நிலம் கையகப்படுத்த தேவையில்லை. இருப்பினும் இத்திட்டத்தை செயலாக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப்பகுதி தற்போது மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் 26.03.2013-ல் ஒருங்கிணைந்த திட்ட மாற்றத்திற்கு இணக்கத்திற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இறுதி ஒப்புதலுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கோவை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 14

இத்திட்டத்தின் பரப்பளவு 96.10 ஏக்கராகும். இத்திட்டமானது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.788 நாள்.29.03.1971 -ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசிதழ் 19.05.1971-ல் பாகம் 2 பகுதி 2 பக்கம் 2லிருந்து 15 வரை பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் குடியிருப்பு மனைப்பிரிவுகள் பல அங்கீகரிக்கப்பட்டு திட்ட அடிப்படையில் அபிவிருத்தி அடைந்து வருகிறது. இத்திட்டம் தற்போது மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## மார்க்கெட் பைபாஸ் விரிவு மேம்பாட்டு திட்டம்

இத்திட்டத்தன் பரப்பளவு 184.61 ஏக்கராகும். 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்பு சட்டத்தின் அங்கீகாரத்திற்குட்பட்ட உள்ளூர் திட்டக்குழுமம் அமைக்கப்பட்ட பின்பு மேற்படி மேம்பாட்டுத் திட்டத்தை மறு அங்கீகாரம் செய்து மீண்டும் அனுப்பும்படி 31.08.1972ம் நாள் அரசு குறிப்பாணை எண்.40797/எம் எ/73/16-ன் கீழ் அரசு மேற்படி மேம்பாட்டு திட்டத்தை திருப்பி அனுப்பிவிட்டது.

சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் 12.11.1974-ம் தேதிய 30763/74 அதில் 1971-ம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின் கீழ் பிரசுரம் செய்யும்படி அறிவுரை வழங்கியதின் பேரில் மேற்படி மேம்பாட்டுத் திட்ட அறிக்கையை 15.12.1976-ம் தேதிய உள்ளூர் திட்டக்குழுமம் 28-ம் எண் தீர்மானத்தின்படி 1971-ம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்டம் 19வது பிரிவுகள் மாலைமுரசு நாளேட்டில் 19.01.1977-ம் தேதியிலும், மாவட்ட அரசிதழில் 27.01.1977-ம் தேதியிலும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

திட்டவரைபடம் 2 வரப்பெற்று நிலம் மற்றும் கட்டிட சொந்தக்காரர்களின் கூட்டம் 13.09.1979-ம் தேதி கூட்டப்பெற்றதில் வரப்பெற்ற 6 ஆலோசனைகள் உள்ளூர் திட்டக் குழுமத்தின் முன் வைக்கப்பட்டது. அதன் பேரில் கோவை நகர் ஊரமைப்பு முதுநிலை துணை இயக்குநர் உள்ளூர் திட்டக் குழுமத்தின் சிபாரிசின்படி திருத்திய வரைபடம் டி.டி.பி. ஆர்.சி.எண்.3/89-ல் அனுப்பப்பட்டது.

வரைபடம் எண் 2-ன் மீது, பொது மக்களின் ஆட்சேபம் மற்றும் ஆலோசனைகள் கோரி உரிய விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டு, நிலஉரிமையாளர் கூட்டம் 05.12.2005-ம் தேதி நடைபெற்றது. அதில் எவ்வித ஆம்சேபனையோ, ஆலோசனைகளோ பெறப்படாததால், படிவம் எண்.10 பூர்த்தி செய்து உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் எண்.33, நாள்,31.01.2006-ல் நிறைவேற்றி சென்னை நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு இணக்கம் வேண்டி இவ்வலுவலகம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதில் சென்னை, நகர் ஊரமைப்பு துறை ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.11941/2009 டிபி2, நாள்.26.12.2012 உத்தரவு பிரகாரம், தமிழ்நாடு நகர் ஊரமைப்புத்துறை சட்டம்

பிரிவு 28-ன் கீழ் இணக்கம் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் திட்ட வரைபடம் எண்.3/DDP/CR/DYCA.NO.12/2012 பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் புதிதாக தயாரிக்கும் பொருட்டு ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு வடிவம் 10-ல் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

## கோட்டாம்பட்டி கிழக்கு

இத்திட்டத்தின் பரப்பளவு 347.72 ஏக்கராகும். வரைவு நிலையில் உள்ளது. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11344/2005/டிவி2, நாள்.11.07.2008-ல் அரசாணை எண்.2767, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள்.31.12.1976-ல் அறிவிப்பு செய்யப்பட்ட கோட்டாம்பட்டி கிழக்கு விரிவு அபிவிருத்தி திட்டத்தினை நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 19(1)ன் கீழ் உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் இயற்றி 19(2)-ன் கீழ் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து அதனை 20-ன் கீழ் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தும் அரசினால் மறு ஆய்வு ஒப்புதல் அளிக்கப்பட்ட பொள்ளாச்சி முழுமைத்திட்டத்தின் நில உபயோகங்களை குறிப்பிட்டும், நில உபயோகங்களை ஆய்வு செய்தும் வரைபடம் எண் 2 தயாரித்து தர நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கோவை அவர்களுக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நில உரிமையாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு படிவம் 10-ல் ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர், கோவை அனுப்பப்பட்டு நடவடிக்கையில் இருந்ததில் தற்போழுது ந.ஊ.ஆணையர் சென்னை அவர்களின் உத்தரவு ந.க.எண்.11344/2005/டிபி2 நாள்.11.07.2008 இதன்படி ரத்து செய்யப்பட்டுள்ளது.

## கோட்டாம்பட்டி வடக்கு

ஏற்கனவே கோட்டாம்பட்டி வடக்கு விரிவு அபிவிருத்தி திட்டம் இணக்கம் பெறப்பட்டதை தற்போது ந.ஊ.இ சென்னை அவர்களின் ந.க.எண்.27657/2004/டிபி2 நாள்.26.05.11 ரத்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் உள்ளடக்கிய இடங்களை மறு ஆய்வு செய்யப்பட்டு முழுமைத்திட்ட அனைத்து நில உபயோகங்கள் நிலை நிறுத்தப்பட்டு மற்றும் சுற்றியுள்ள விரிவு அபிவிருத்தி திட்டத்தில் உள்ள உத்தேச சாலைகளையும் கணக்கில் கொண்டு தயாரித்து நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 25-ன் கீழ் இணக்கம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம் 15, 16

இத்திட்டம் நகர ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண். 7725/98/DP3 நாள். 08.10.1998-ன் படி கைவிடப்பட்டு உள்ளது.

## 61.அளவு கடப்புகள்

தற்காலிக ஆக்கிரமிப்புகளை வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை, தேசிய நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை மற்றும் நகராட்சி ஆகிய துறைகள் ஒன்று சேர்ந்து அவ்வப்போது நகரில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

| 6.பொது வருவாய் |
|---|

## 62.வருவாய் கணக்கு வரி விகிதங்கள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு வரிகள் விதிக்கப்பட்டு இருந்தன.

**கட்டிடவரி**

அறிக்கையாண்டு வரை 23102 கட்டிடங்களுக்கு வரிவிதிக்கப்பட்டது. இந்நகராட்சியில் வாடகை மதிப்பின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆண்டிற்கு 36 சதவிதிகம் வரி விதிக்கப்பட்டது.

| வ.எண் | வரியின் வகை | அரையாண்டு வரி |
|---|---|---|
| 1. | பொது செயலுக்காக வரி | 7.50 சதவிதிதம் |
| 2. | தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 8.00 சதவிகிதம் |
| 3. | கல்வி வரி | 2.50 சதவிகிதம் |
| | | **18.00 சதவிகிதம்** |

சொத்துவரி விகிதத்தில் கல்வி வரி தவிர்த்த ஏனையி வரித்தொகையில் 10 சதவிகிதம் நூலக வரியாக சொத்துவரியுடன் வசூல் செய்யப்பட்டு நூலக ஆணைக் குழுவிற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

**காலி நில வரி**

அறிக்கையாண்டில் 30.09.2009 முடிய சந்தை மதிப்பின் பேரில் முதல் அரையாண்டிற்கு ரூ.1000/- மதிப்பிற்கு ரூ.7.70 வீதம் வரி விதிப்பு செய்யப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) அரசாணைகள் 150, 151 நாள்.20.08.2009, நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கை ந.க.எண்.41802/2009/ஆர்1 07.09.2009-ல் வழங்கப்பட்ட வழிகாட்டும் நெறிமுறைகளின் படியும், 30.09.2009 ஆம் நாளிட்ட 550 ஆம் எண்ணிட்ட நகரமன்ற தீர்மானத்தில்

தீர்மானிக்கப்பட்ட படியும் 01.10.2009 முதல் சதுர அடிக்கு ரூ.0.50 என நிர்ணயம் செய்து காலிமனை வரி வழங்கப்பட்டு வருகிறது.

## <u>பொது சொத்துவரி சீர்திருத்தம்</u>

இந்நகராட்சியில் 01.04.2008 முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஆணை எண்.150 நாள். 12.11.2007-ல் உத்திரவு இடப்பட்டுள்ளது. அதன்படி அடிப்படை மதிப்பு நிர்வாக அதிகாரியால் நிர்ணயம் செய்யப்பட்டு மன்றத்தின் முன் வைக்கப்பட்டதில் நகர் மன்றம் தனது 28.02.2008-ம் தேதிய தீர்மான எண்.106-ல் தமிழகத்திலேயே பொள்ளாச்சி நகராட்சியில் தான் சொத்துவரி அடிப்படை மதிப்பு அதிகமாக உள்ளது எனவும் 01.04.2008 முதல் நடைமுறைப்படுத்தப்படும் சொத்துவரி சீராய்வில் சதுர அடிக்கு மேலும் கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்படுவார்கள். மேலும் அரசின் மீது கெட்ட பெயரும் ஏற்பட வாய்ப்புள்ளது.

நகராட்சிகளில் சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கு கையாள வேண்டிய நடைமுறைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. நகராட்சயின் மேம்பாட்டிற்கு அடிப்படை முதன்மை வருவாய் நிதி ஆதாரம் சொத்துவரியாகும். சொத்துவரி சீராய்வு பொது மக்களையும் வரி செலுத்துவோரையும் பாதிக்காத அளவில் வரி உயர்வு நியாயமானதாகவும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

எனவே, 01.10.1998 முதல் அமுதல்படுத்தப்பட்டு வரும் அடிப்படை மதிப்பினை மாற்றம் செய்யாமல் தொடர்ந்து 01.04.2008 முதல் அமுல்படுத்த அரசை கேட்டுக் கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது அடிப்படை மதிப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | A.மண்டலம் | 2.75 பைசா |
| 2. | B.மண்டலம் | 2.25 பைசா |
| 3. | C.மண்டலம் | 1.75 பைசா |

இந்நகராட்சியில் 3 மண்டலமாக பிரிவினை செய்யப்பட்டிருந்தாலும் நகரில் தற்போது 13 குடிசை வாழ் பகுதிகள் உள்ளது. உதாரணமாக நன்கு அபிவிருத்தியான மகாலிங்கபுரம் போன்ற பகுதி மக்களுக்கும் அடிப்படை மதிப்பு 1.75 பைசா விகிதத்திலும் கண்ணப்பன் நகர் போன்ற குடிசை வாழ் பகுதி மக்களுக்கும் சதுர அடி 1.75 பைசா அடிப்படை மதிப்பில் வரி நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. இதனை முதலில் மாற்றம் செய்த 4 மண்டலங்களாக பிரிவினை செய்ய வேண்டியது அவசியமாகிறது. இதனால் வரி உயர்வு நியாயமானதாகவும் வெளிப்படையான அணுகுமுறை கொண்டதாகவும் இருக்கும். எனவே தற்போது உள்ள 3 மண்டலங்களை 4 மண்டலங்களாக பிரிக்க வேண்டிய அவசியமானதாகிறது. இதனை நகர் மன்றம்

நன்கு பரிசீலித்து 4 மண்டலமாக பிரிவினை செய்ய தீர்மானித்தது. தற்போது "C" மண்டலத்தில் உள்ள தெருக்களை நன்கு ஆராய்ந்து நகர் மன்ற உறுப்பினர்களை கலந்து ஆலோசித்து மிகவும் பின் தங்கிய மற்றும் குடிசைப்பகுதி மக்கள் மட்டும் வாழும் கீழ்க்கண்ட பகுதி தெருக்கள் அடங்கிய பகுதி "D" மண்டலமாக தேர்வு செய்யப்பட்டது.

## "C" மண்டலத்திலிருந்து ""D" மண்டலத்தில் மாற்றம் செய்யப்படும் தெருக்கள் விபரம்.

| வார்டு எண் | தெருவின் பெயர் | | |
|---|---|---|---|
| 1. | டாக்டர் அம்பேத்கார் வீதி<br>செல்வகுமாரர் வீதி<br>செல்வகுமாரர் வீதி விஸ்தரிப்பு | 28. | பார்க் ரோடு |
| 2. | வீரமாமுனிவர் வீதி<br>மணிமேகலை வீதி<br>திருமூலர் வீதி<br>கந்தன் வீதி,<br>ரயில்வே லைன் சந்து | 29. | மதுரை வீரன் கோவில்<br>அன்னை கஸ்தூரிபாய் வீதி<br>கலைவாணர் வீதி |
| 3. | ரயில்வே லைன் இட்டேரி<br>வடுகபாளையம் இட்டேரி | 30. | நேரு நகர் |
| 9. | விஜயபுரம்<br>அண்ணா நகர்<br>கதிரவன் நகர் - 1 | 31. | தன்னாச்சியப்பன் கோவில் வீதி<br>மரப்பேட்டை பள்ளம் கிழக்கு<br>மரப்பேட்டை பள்ளம் மேற்கு<br>சுண்ணாம்பு காள்வாய் இட்டேரி<br>முகமது நகர் |
| 10. | நகராட்சி துப்புரவாளர் பழைய குடியிருப்பு<br>பி.எம்.சி. புதிய காலனி<br>நந்தனார் காலனி, ஆர்.பி.எஸ் நகர் | 33. | பெரியார் காலனி மேற்கு<br>நடராஜ் மணியகாரர் காலனி<br>பெரியார் காலனி கிழக்கு<br>20 அட்ச திட்ட சாலை |
| 11. | மரப்பேட்டை வீதி<br>விநாயகர் கோவில் வீதி விஸ்தரிப்பு | 34. | உடுமலை நாராயணன் காலனி<br>ஏ.பி.எஸ் நகர் |
| 23. | குமரன் நகர் I லே அவுட்<br>குமரன் நகர் II லே அவுட்<br>ரங்கசாமி லே-அவுட் | 35. | எம்.ஜி.ஆர் நகர்<br>காமராஜ் நகர்<br>அமைதி நகர் |

| | | | |
|---|---|---|---|
| | பழனியப்பா லே-அவுட், பாரத் நகர் | | |
| 24. | கண்ணப்பன் நகர்<br>பாலதண்டாயுதம் நகர்<br>அண்ணா நகர்<br>குமரன் நகர் கல்லுக்குழி புறம் போக்கு | 36. | மரப்பேட்டை வீதி (பொட்டு மேடு) |
| 25. | ஷெரிப் காலனி | | |
| 26. | சின்னச்சாமி லே-அவுட் | | |

சொத்துவரி சீராய்வுக்கான அடிப்படை மதிப்பீடு எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது என்பதற்கு வெளிப்படையான கோட்பாடு ஏதுமில்லை. மேலும் அடிப்படை மதிப்பு சரியானதா என்பதை கண்டறிய மன்றத்திற்கு அதிகாரமில்லாத நிலையில் 1998-ல் நிர்ணயித்த அடிப்படை மதிப்பினை அனுசரித்து 3 மண்டலங்களை 4 ஆக பிரித்து கீழ்க்கண்டபடி அடிப்படை மதிப்பினை சீர் செய்ய வேண்டுமென்று மன்றம் முடிவு செய்ய தீர்மானித்தது.

## <u>அடிப்படை மதிப்பு</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | மண்டலம் | A | சதுர அடி 2.80 பைசா |
| 2. | மண்டலம் | B | சதுர அடி 2.30 பைசா |
| 3. | மண்டலம் | C | சதுர அடி 1.80 பைசா |
| 4. | மண்டலம் | D | சதுர அடி 1.10 பைசா |

நகராட்சிகளில் சொத்துவரி மறு சீராய்வின் போது சம்பந்தப்பட்ட நகர் மன்றமே வரி விதிப்பு செய்வதை தீர்மானித்துக் கொள்ளலாம் என பிறப்பித்த அரசு ஆணை எண்.110 நாள்.23.06.2008 -ன் தெளிவுரையினை ஏற்று குடியிருப்ப கட்டிடங்களுக்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் வரி விதிகத்தைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்து மன்றம் தீர்மானித்தது.

01.10.2007-க்கு பின்பு 31.03.2008 வரை சொத்துவரி விதிக்கப்ட்ட கட்டிடங்களுக்கு வரி சீராய்வின் படி வரி உயர்வு செய்வதில்லை என மன்றம் தீர்மானித்துள்ளது.

| | **அரசு ஆணைப்படி உயர்வு செய்யப்பட வேண்டிய வரி விதிப்பு சதவீதம்** | **தற்சமயம் நகர் மன்றம் உயர்வு செய்ய தீர்மானித்துள்ள சதவீதம்** | | |
|---|---|---|---|---|
| 01.04.2006 முதல் 30.09.2007 வரை வரி விதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு அரசு ஆணைப்படி அதிகபட்சமாக வரி உயர்வு சதவீதம் | 5% உயர்வு செய்யப்பட வேண்டும் | 5 | % | உயர்வு |
| 01.04.2005 முதல் 31.03.2006 வரை வரி | 10% உயர்வு | 5 | % | உயர்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| விதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு அரசு ஆணைப்படி அதிகபட்சமாக வரி உயர்வு சதவீதம் | செய்யப்பட வேண்டும் | | | |
| 01.04.2004 முதல் 31.03.2005 வரை வரி விதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு அரசு ஆணைப்படி அதிகபட்சமாக வரி உயர்வு சதவீதம். | 15% உயர்வு செய்யப்பட வேண்டும் | 10 | % | உயர்வு |
| 01.04.2003 முதல் 31.03.2004 வரை வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு அரசு ஆணைப்படி அதிகபட்சமாக வரி உயர்வு சதவீதம் | 20% உயர்வு செய்யப்பட வேண்டும் | 10 | % | உயர்வு |

| சொத்து விபரம் | அரசு உயர்வு செய்ய வழங்கியுள்ள சதவீதம் | தற்போது மன்றம் உயர்வு செய்ய தீர்மானித்துள்ள சதவீதம் |
|---|---|---|
| குடியிருப்புகளுக்கு | 20 % மிகாமல் | 10% |
| தொழிற்சாலைகள் | 100 % மிகாமல் | 15% |
| வணிக கட்டிடங்கள் | 150 % மிகாமல் | 20% |

## குடிநீர் விநியோக கட்டணம் மாற்றி அமைத்தல்

பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோக திட்டத்திற்கு அம்பராம்பாளையம் பகுதியில் ஆழியாற்றில் தண்ணீர் எடுக்கப்பட்டு, படிகாரம் போட்டு சுத்தம் செய்து, பின்னர் உரிய முறையில் வடிகட்டி லிக்யூட் குளோரின் மூலம் குளோரினேசன் செய்து, பாதுகாப்பான முறையில் நகரப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. மேற்படி திட்டத்தில் வழங்கப்படும் குடிநீர், மாதிரிகள் எடுத்து கோயமுத்தூர் தலைமை நீர் பகுப்பாய்வாளர் ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டதில் குடிநீர் குடிப்பதற்கு ஏற்றதாக உள்ளது. 01.10.2016-ம் தேதிய ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நகராட்சியின் குடிநீர் விநியோக கட்டணம் கீழ்க்காணும்படியாக உயர்த்த மன்றம் 30.05.2008-ம் நாள்284ம் எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

| வ.எண் | இணைப்பின் தன்மை | முன்வைப்புத் தொகை ரூ. | மாதாந்திரக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1 | வீட்டு இணைப்புகளுக்கு | 4,400/- | குறைந்தபட்சம் 10000 லிட்டர் வரை ரூ.50/-ம் 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் கூடுதல் ரூ.5/-ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| 2 | வீடில்லாத இணைப்புகள் | 11,000/- | குறைந்தபட்சம் 10000 லிட்டர் வரை ரூ.150/-ம், 10000 லிட்டருக்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் கூடுதல் ரூ.10/-ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| 3 | தொழிற்சாலை இணைப்புகளுக்கு | 11,000/- | குறைந்தபட்சம் 10000 லிட்டர் வரை ரூ.100/-ம், 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் கூடுதல் ரூ.10/-ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. |

மேற்படி முறையில் குடிநீர் விநியோக கட்டணத்தை மாற்றி வசூலிக்கப்படும் பட்சத்தில் மட்டுமே நகராட்சியால் வழங்கப்படும் குடிநீர் விநியோகத்திற்கான மின் கட்டணம், குடிநீர் விநியோக பராமரிப்பு செலவு, குடிநீர் திட்டத்திற்கு பெறப்பட்ட கடனை திருப்பிச் செலுத்துதல் ஆகிய செலவினத்தை ஈடு செய்ய இயலும். இருப்பினும் குடிநீர் கட்டண உயர்வு தொடர்பாக தினசரிகளில் விளம்பரம் செய்யப்பட்டு பொதுமக்களின் ஆலோசனை பெறப்பட்டது. அதன் பேரில் மன்றம் தனது 01.10.2012-ம் தேதிய 464 எண் தீர்மானத்தில் வரப்பெற்ற ஆட்சேபனைகளை நிராகரித்து உயர்த்தப்பட்ட கட்டணங்களை உறுதி செய்துள்ளது. அதன் பேரில் குடிநீர் கட்டணங்களை உயர்த்திக் கொள்ள பொது அங்கீகாரம் வழங்கி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமையில் பொறியாளர் அவர்கள் தமது 10.02.2009-ம் தேதிய ந.க.63642/2008/குவ1 எண் செயல்முறைகளில் அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன் பேரில் மன்றம் 13.02.2009-ம் தேதிய 97 எண் தீர்மானத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 01.10.2008 முதல் குடிநீர் கட்டணங்கள் உயர்வு செய்யப்பட்டது.

## <u>தொழில்வரி</u>

12.01.1999-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 11 எண் ஆணையில் வெளியிடப்பட்ட பேரூராட்சிகள் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தொழில் வரி வசூலித்தல்) விதிகள் விதி 16-ன்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழிலல்வரி விகிதம் உயர்வு செய்யப்பட வேண்டும். அதன்பேரில் நகர்மன்றம் தனது 27.09.2013-ம் தேதிய 1486ம் எண் தீர்மானத்தில் 25 சதவீதம் உயர்வு செய்ய அனுமதித்தது. 01.10.2013 முதல் தொழில் வரி வசூல் செய்யப்படுகிறது. அறிக்கையாண்டில் நடப்பு கோப்ப தொழில் வரியாக ரூ.66,13,590/- கேட்பு நிர்ணயிக்கப்பட்டது.

| <u>கேட்பு விபரம் (லட்சத்தில்)</u> | | | | | |
|---|---|---|---|---|---|
| | | **சொத்துவரி** | **தொழில்வரி** | **தண்ணீர் கட்டணம்** | **வரியில்லா இனம்** |
| 1. | கேட்பு | 974.78 | 66.14 | 322.81 | 473.35 |
| 2. | வசூல் | 908.85 | 54.28 | 319.75 | 473.30 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | தள்ளுபடி | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 4. | அதிகப்படி வசூல் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 5. | நிலுவை | 65.93 | 11.86 | 3.06 | 0.05 |

நிலுவைத் தொகைகள் பெரும்பாலும் அரசுக் கட்டிடங்கள் மற்றும் வழக்கு மீதான சொத்துவரி ஆகும். இருப்பினும் நிதி நிலைமை பெருக்க நிலுவை முழுவதையும் விரைவில் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 63. (அ) பொது நிதிகணக்கு

தணிக்கை செய்யப்படாத கணக்கின்படி 2017-2018-ம் வருடத்திய வரவினங்களில் முக்கிய இனங்களின் விவரம் வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| அ | சொத்துவரி விதிப்பு | ரூ. | 44778879/– |
| ஆ | இதர வரியினங்கள் | ரூ. | 6884020/– |
| இ | அரசு மூலம் வருவாய் | ரூ. | 20162450/– |
| ஈ | பற்றாக்குறை மானியம் | ரூ. | – |
| உ | கட்டணங்கள் மூலம் | ரூ. | 21873865/– |
| ஊ | மானியம் மற்றும் உதவித்தொகை | ரூ. | 110724718/– |
| எ | விற்பனை மற்றும் வாடகை | ரூ. | 44204802/– |
| ஏ | இதர வருவாய் | ரூ. | 1205327/– |
| | **மொத்த வருமானம்** | ரூ. | **249834061/–** |

## செலவினங்கள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| அ | ஊதியம் வகைக்கு | ரூ. | 77349547/- |
| ஆ | அலுவலர்கள் இதர தனிப்பட்ட செலவினம் | ரூ. | - |
| இ | ஓய்வூதியப் பயன்கள் | ரூ. | 69314716/- |
| ஈ | நடைமுறை செலவுகள் | ரூ. | 4561232/- |
| உ | பழுது நீக்கம் | ரூ. | 12634620/- |
| ஊ | திருவிழா செலவு | ரூ. | - |
| எ | நிர்வாக செலவு | ரூ. | - |
| ஏ | நிதிச் செலவு | ரூ. | 1762360/- |
| ஐ | சொத்துக்கள் மீதான வருடாந்திர கழிவு | ரூ. | 117070057/- |
| **மொத்த செலவினம்** | | **ரூ.** | 474562830/- |

## (ஆ) கல்வி நிதிக்கணக்கு

தணிக்கை செய்யப்படாத கணக்கின்படி 2017-2018 ஆண்டில் கல்வி நிதிக்கணக்கின் மீதான வரவு மற்றும் செலவு விபரங்கள் பின்வருமாறு,

### வரவினம்

| | | | |
|---|---|---|---|
| அ | சொத்துவரியின் மீதான கல்வி நிதி வரவு | ரூ. | 14926289/- |
| ஆ | இதர வருமானம் | ரூ. | 358405/- |
| | **மொத்தம்** | ரூ. | **15284694/-** |

**செலவினம்**

| | | | |
|---|---|---|---|
| அ | நடைமுறை செலவு | ரூ. | - |
| ஆ | நிர்வாக செலவு | ரூ. | - |
| இ | சொத்துக்களின் மீதான வருடாந்தர கழிவு | ரூ. | 7707125/- |
| ஈ | பராமரிப்பு செலவுகள் நிதி செலவுகள் | ரூ. | 4108225/- |
| | | ரூ. | **11815350/-** |

**(இ) குடிநீர் கணக்கு**

தணிக்கை செய்யப்படாத கணக்கின்படி 2017-2018ம் வருடத்தில் குடிநீர் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு மற்றும் செலவு விபரம் பின்வருமாறு,

**வரவினம்**

| | | | |
|---|---|---|---|
| அ | சொத்துவரியின் மீதான கல்வி நிதி வரவு | ரூ. | 47764145/- |
| ஆ | சேவைக்கட்டணம் | ரூ. | 38770473/- |
| இ | இதர வருவாய் | ரூ. | 4520188/- |
| | **மொத்தம்** | ரூ. | **91054806/-** |

செலவினம்

| | | | |
|---|---|---|---|
| அ | ஊதியம் வகைக்கு | ரூ. | 8230009/- |
| ஆ | அலுவலர்கள் இதர தனிப்பட்ட செலவினம் | ரூ. | - |
| இ | ஓய்வூதியப் பயன்கள் | ரூ. | - |
| ஈ | நடைமுறை செலவு | ரூ. | 7642540/- |
| உ | பழுது நீக்கச் செலவு | ரூ. | 22478854/- |
| ஊ | நிர்வாகச் செலவு | ரூ. | 323327/- |
| எ | நிதிச் செலவு | ரூ. | 5958/- |
| ஏ | சொத்துக்களின் மீதான கழிவு | ரூ. | 9051631/- |
| | **மொத்தம்** | ரூ. | **47732324/-** |

தணிக்கை செய்யப்படாத கணக்கின்படி நகராட்சியின் ஒட்ட மொத்த வரவு செலவின் விபரம் பின்வருமாறு,

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பொது நிதி | 249834061/- | 476542870/- |
| கல்வி கணக்கு | 15284694/- | 11815350/- |
| குடிநீர் கணக்கு | 91054806/- | 47732324/- |

| மொத்தம் | 356173561/- | 534110504/- |
|---|---|---|

இந்நகராட்சியில் வரிகள் உரிமையாணைக் கட்டணங்கள் அரசினரின் மானியங்கள் உதவித்தொகைகள் வருவாய் தரும் சாதனங்களின் மூலம் வரவுகள், அரசினர் கடன்கள் கேளிக்கை வரி முதலியவைகளே முக்கிய வருமானம் ஆகும். வசூலிக்கப்ட்ட தொகை முழுவதும் இயல்பான செலவுகளுக்கும் முதலீடு செலவுகளுக்கும் பயன்படுத்தப்பட்டன.

## 64. மூலதனம்

அறிக்கையாண்டில் எல்லா கணக்கு தலைப்புகளிலும் மூலதன பணிகள் செலவு செய்யப்பட்டன.

## 65. பொது.

அறிக்கையாண்டில் நகராட்சி எல்லையில் யாதொரு மாறுதலும் இல்லை. நகராட்சிக்கு வரவேண்டிய வரி இனங்கள் வரியில்லாத இனங்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள இனங்கள் நீங்கலாக பாக்கியின்றி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நகராட்சி சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டது. அரசினரிடமிருந்து பெற்ற நிதி உதவித்தொகைகள் கொண்டு மண் சாலைகள் தார் தளச்சாலைகளாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சயிலிருந்து பராமரிக்கப்படும் அனைத்து மருத்துமனைகளிலும் நகர மக்களுக்கு சிறப்பான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பொது நிதிக்கணக்கில் வருமானத்தைப் பெருக்கும் வகையில் வரியினங்கள் மற்றும் வரியில்லாத இனங்கள் கூடுதல் செயல் திட்டங்கள் நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நகர்மன்றத் தலைவர், நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களும் அவ்வப்போது தக்க அறிவுரைகள் வழங்கி வருகிறார்கள். பொதுபிரிவில் 2017-2018 ஆம் ஆண்டு நகராட்சியின் செயல்பாடுகள் மிக சிறப்பானதாக அமைந்தது.

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**